www.tamilarangam.net

# ஊத்ரி

2

தை சித். 1993



RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
SEINE FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூரத்தில் பச்சை

- நிருபா -

சூரியன் ஒழிந்துகொள்ள..........
கருமேகங்கள்
கோபங்கொண்டு
வானத்தில் கொப்பளிக்கும்

மாலை நேரம் வந்தும்
புற்களை செடிகளை
பயிர்களை மரங்களை
அவற்றின் பசுமையை
பிரிய விருப்பற்று
பாத்தியில் படுத்திருப்பேன்

இன்று
கிழிக்கப்பட்டு கசக்கப்பட்டு
இரத்தத்தால் தோய்க்கப்பட்ட
அந்தப் பச்சையைப் போல்
நானும் அகதியாய்!

உணர்வுகளை இழந்த
சடலங்கள் உலாவும்
சுடுகாட்டிலும்
மனிதத்தைச் சிதைக்கும்
பச்சைகளைக் கண்டேன்

புகையிரத நிலையத்திலும்
நகரத்திலும்
வெளிநாட்டவர்கள்
நடமாடும் இடங்களிலும்
துவக்குகளைச் சொருகியபடி
கடிநாய்களின் காவலர்களாய்
பச்சைகளைக் கண்டேன்

மண்டியிட வைத்து
கைகளைக் கட்டி
பின்புறமாய்த் தாக்கி
இழுத்துச் சென்று
வண்டிக்குள் பூட்டும்
வஞ்சகப் பச்சைகள்
மக்களின் காவலர்களாம்!

கறுப்பரைக் கண்டால்
கள்வரென்று முடிவு கொண்டு
சோதனைகள் செய்யும்
சிறைக்குள் தள்ளும்
அதிகார வர்க்கத்தின்
அங்கமென்று சொல்லும்
அநியாயக் காரர்களை
பச்சையாய்க் கண்டேன்

www.tamilarangam.net

# பெண்களுக் கெதிரான யுத்தம்

இன்று உலகெங்கிலும் நடாத்தப்படும் யுத்தங்களினால் ஆண்–பெண் ஆகிய இருபாலாரும் பாதிக்கப்படுகின்றனராயினும் இந்த யுத்தங்களினால் பெண்கள் பன்மடங்கு அதிகமான சுமைகளையும் பாதிப்புக்களையும் தாங்கவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர்.எப்போதும் பிள்ளையைப் பெற்று, பராமரித்து, வீட்டுவேலைகளையும் செய்து இயந்திரமாக இயங்குபவர்கள் பெண்கள்!

யுத்தகாலங்களில் " ஆண் வீரர்கள் " ஆயுதங்களை ஏந்தி சுடுதல்,பலாத்காரப்படுத்தல் போன்ற வீரவிளையாட்டுக்களைப் புரிய, பலாத்காரப்படுத்தப் படுபவர்களும், குடும்பப் பொறுப்புக்களைக் கவனிப்பவர்களும் பெண்களே! "இப்ப யாழ்ப்பாணத்துப் பெண்களுக்கு விடுதலை கிடைத்து விட்டது,முன்னர் ஆண்கள் செய்த வெளிவேலைகள் அனைத்தையும் பெண்களே செய்கிறார்கள்." என்று அண்மையில் இலங்கையிலிருந்து வந்த கடிதமொன்றில் பெண்ணொருத்தி எழுதியிருந்தார்.

காலங் காலமாக வீட்டுக்குள்ளேயே அடைபட்டிருந்து,வீட்டுவேலைகளைச் செய்து வந்த பெண் வெளியுலகத்தைப்பார்ப்பதற்கும் அத்தோடு பழகுவதற்கும் இதுவொரு சந்தர்ப்பமாக,ஒருபடி முன்னேற்றமானதாக அமைந்தாலும் வழமையிலும் விடப் பெண்கள் மேலதிகமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தம்மை வருத்தி குடும்பத்திற்கு உழைக்கவேண்டியிருப்பதை இங்கே கவனிக்கத் தவறலாகாது.

இந்தப் பெண்களுடைய கஸ்டங்கள் இதோடு நின்றுவிடுகின்றனவா ? வரலாற்றின் எந்தப் பக்கத்தைப் பார்த்தாலும், எந்தவொரு யுத்த சூழலிலும் படைவீரர்களாலும், போராளிகளாலும் பல்லாயிரக் கணக்கில் பாலியல் ரீதியாகப் பலாத்காரப்படுத்தப் பட்டுள்ளனர்.

இலங்கை இராணுவத்தினரும் ,இயக்கங்களும், இந்தியத் துருப்புக்களும் பல்லாயிரக்கணக்கில் பெண்களை அவர்களது கணவர்,பெற்றோர், சகோதரர்களின் முன்னிலையில் பாலியற் பலாத்காரம் செய்தனர்.

ஈராக்கின் குவைத் மீதான ஆக்கிரமிப்பின் போது,ஈராக்கியத் துருப்புக்களால் இதே போன்று குவைத்பெண்கள் பாலியற் பலாத்காரத்திற்கு உட் பட்டனர்.பொசினியாவிலுள்ள (Bosnia) கு (று) வாட்சிய முஸ்லிம் பெண்களின் இன்றைய நிலையை உலகே அறிந்தது. கடைசியாக கிடைத்த தகவலின் படி சேர்பிய (Serbia) இராணுவத்தினரால் பாலியல் பலாத்காரத்திக்கு உட்படுத்தப்பட்டுள்ள முஸ்லீம், கு (று) வாட்சிய பெண்களின் தொகை 50,000 ஆயிரத்திக்கும் மேல் என அறியமுடிகிறது. (இதே போல் சேர்பியப் பெண்களும் கு (று) வாட்சியர்களால்,முஸ்லீம்களால் பலாத்காரப்படுத்தப்படுகிறார்கள் என்று அறியமுடிந்தாலும் சரியான தகவல்கள் தெரியவில்லை) எந்த நிமிடத்திலும் குண்டு பாய்ச்சப்படலாம், எந்த வேளையிலும் வீட்டை விட்டு, ஊரை விட்டு அதியாக ஓட நேரிடலாம் என்கின்ற பீதி,உணவு மருத்துவ தட்டுப்பாடு அதனால் தன் உடலைச்சீராகவைத்திருக்க

www.tamilarangam.net

முடியாமை, இறப்பு,இழப்பு, சீரழிந்த வாழ்கை இவற்றின் ஊடாக ஏற்பட்ட உளப்பாதிப்புக்கள் இதுபோன்ற இன்னும் பல காரணங்களினால் ஒவ்வொரு நிமிடமும் போர்ச்சூழலில் போராடிக் கொண்டிருக்கும் பெண்களின் மீது பாலியற்பலாத்காரத்தைப் பாவிப்பதென்பது மனிதாபிமானமற்ற செயல் என்பது மட்டுமல்லாது "தன்னுடலை தனது சுய விருப்பத்திற்கு இயங்கவிடல் " என்கின்ற சாதாரண உரிமையைக்கூட சிதைத்து சின்னாபின்னமாக்குவதாகும்.
ஒரு பாதுகாப்பற்ற, ஆயுதமற்ற பெண்கள் கூட்டத்தின் மேல் அதிகாரத்தின் சீடர்கள், தம்மை ஆயுதங்களினால் பாதுகாத்துக்கொள்ளக் கூடியவர்கள் தமது அரக்கத்தனத்தை, ஆண்மைத்தனத்தை எப்படியெல்லாம் பாவிக்கிறார்கள் என்பதற்கு உதாரணமாக கீழே சில வாக்கு மூலங்கள் தரப்படுகின்றன.

**முதலாவது பெண்:**

" எனக்கு 40 வயது. எனது பிறப்பிடமான வடக்கு பொசினியாவை சேர்பியர்கள் பிடித்ததன் பின் நடந்த அநியாயங்களை எப்படிச்சொல்ல! தாய்களையும், பிள்ளைகளையும் கணவர்களிடமிருந்து பிரித்து வேறு வேறு முகாம்களில் அடைத்தனர்.நான் ஆறு கிழமைகள் சேர்பிய முகாமில் அடைக்கப்பட்டிருந்தேன். அங்கு இரண்டாயிரம் முஸ்லீம், குறுவாட்சியப் பெண்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். ஒரே இருட்டு எங்களை மிருகங்களை போன்று அடைத்து வைத்து மீண்டும் மீண்டும் பாலியற் பலாத்காரம் செய்தனர். சில நேரங்களில் மட்டுமே காய்ந்த துண்டுப்பாணும், தண்ணியும் தந்தனர்.அங்கிருந்து எமது முகங்களுக்கு துணியால் கட்டி

www.tamilarangam.net

வேறு இடங்களுக்கு கொண்டு சென்று அங்கும் பலாத்காரம் செய்தனர். எங்களை நிர்வாணமாக்கினர். நடனமாடி சேர்பியப் பாட்டுக்களைப் பாடும்படி வற்புறுத்தினர். ஏழு எட்டு வயதுப் பெண்களையும் இரத்தம் ஒழுக ஒழுக இறந்போன சிறு பெண்களின் எட்டு உடல்களை நான் பார்த்தேன். எங்களை "திருக்குறான்" மீது மூத்திரம் பெய்யுமாறு பல வந்தித்தனர்.போத்தல்,துவக்கு முன்வாய் போன்றவற்றால் என்னை சித்திரவதை செய்தனர்.மீண்டும் மீண்டும் என்னை பல ஆண்கள் பலாத்காரம் செய்தனர்."

**இரண்டாவது பெண்:**

" எனக்கு 26 வயது. இரண்டு நாட்களுக்கு ஒரு முறை இரண்டு அல்லது மூன்று பேர் என்னை பாலியல் உறவிற்காகக் கட்டாயப் படுத்தினர். அநேகமாக ஒரே நேரத்தில் எல்லாப் பக்கத்தாலும் ஈடுபட்டனர். உங்களுக்கு நான் என்ன சொல்லுகின்றேன் என்று விளங்குகின்றதா? எனது 45 வயதுடைய தோழிக்கும் 14 வயதான அவள் மகளுக்கும் இதே போல் நடந்தது. இன்று விடுதலையாகி ஐந்து மாதங்களாகியும் அந்தப் 14 வயதுப் பெண் இரத்தக்கசிவால் வேதனையை அனுபவித்துக்கொண்டிருக்கிறாள். எனக்குத் தெரிந்த ஒரு பெண்ணை ஏழு பேர் வீட்டுக்குள் வைத்து பலாத்காரம் செய்தனர்."

அபராஜினி

**மூன்றாவது பெண் (வயது 33:**

92 ஆகஸ்டில் நான் எனது இரு மகன்களுக்கும் முன்னிலையில் பலாத்காரப்படுத்தப்பட்டேன். போர்கு (Focu) விலுள்ள ஒவ்வொரு பெண்ணும் பாலியல் ரீதியாகப் பலாத்காரப்படுத்தப்பட்டுள்ளனர் என்று நான் நினைக்கின்றேன். இந்த மாத முடிவில் என்னை மீண்டும் பலாத்காரம் செய்தனர்."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான்காவது பெண்:

" எனக்கு 12 வயது. என்னை தூக்கிச் சென்று ஒன்பது இரவுகள் தொடந்து கட்டாயமாக உடல் உறவு கொண்டனர். ஒவ்வொரு முறையும் மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட வர்கள். புதியவர்கள். ஆ..... அது எவ்வளவு வேதனையானது,பயங்கரமானது!!"

ஐந்தாவது பெண்:

" எனக்கு அறுபது வயது. இரண்டு பேர் என்னை பலாத்காரம் செய்தனர். நான் எனது கால்களை இறுக்கிப்பிடித்துக் கொண்டேன். எனது மகனுக்கு இந்த விடயம் தெரியக்கூடாது இந்தக் கொடூரத்தை, இரகசியமாக எனது ஆத்மாவில் சுமக்கின்றேன். இது எப்போதுமே மறக்கமுடியாதது."

ஆறாவது பெண்:

"பலாத்காரப்படுத்தப்பட்ட பல பெண்களை நான் சந்தித்தேன். ஒரு 13 வயதுச் சிறுமி பாலியல்பலாத்காரம் செய்யப்பட்ட பின் ஊமையாகி விட்டாள். அவளால் இப்போது கதைக்கமுடிவதில்லை. இன்னொருத்தியை குப்பைத்தொட்டிகளில் அடைத்து வைத்தார்கள் பலாத்காரம் செய்வதற்கு மட்டுமே வெளியில் விட்டார்கள். இன்னும் ஒரு 20 வயதுடைய எட்டு மாதக் கர்ப்பிணிப்பெண்ணின் வயிற்றை உடைந்த போத்தில் கூரால் வெட்டினார்கள். கருவை பிய்த்து எடுத்துவிட்டு அதற்குள் இரண்டு பூனைக்குட்டிகளைப் போட்டார்கள்,"

பாலியல் பலாத்காரத்தின் பின்..........

ஒரு பெண்ணின் விருப்பிற்கு மாறாக பலவந்தமாக உடல் உறவு கொண்டு விட்டு,அவள் அதன் வேதனையை தாங்கமுடியாமல் இருக்கையில் தனது கருவைச் சுமந்து பிள்ளையையும் பெற்றெடுக்கவேண்டும் என்று

www.tamilarangam.net

நிர்ப்பந்திப்பது எத்தனை கொடூரமானது?

குறுவாட்சிய, முஸ்லீம் பெண்கள் பலர் பலாத்காரத்தின் பின் திட்டமிட்டு முகாம்களில் அடைத்து வைக்கப்படுகின்றனர். இவர்கள் கருவை கலைக்கமுடியாத நிலையிலுள்ள கர்ப்பிணிப்பெண்களாக (ஐந்து ஆறு மாதம்) வெளியில் விடப்படுகின்றனர்

பலாத்காரப்படுத்தப்பட்ட பெண்கள் கருவைக் கலைக்கவோ, அல்லது கர்ப்பிணிப்பெண்களுக்கான மருத்துவ வசதிகளோ செய்து கொடுக்கப்படாதா நிலையே காணப்படுகிறது கர்ப்பிணிப்பெண்கள் சிலர் தமக்கு பிள்ளை பிறந்தவுடன் பிள்ளையை கொன்று விடுவோம் என்று ஆத்திரம் அடைந்த நிலையில் கூறுகின்றனர்.

பாலியல் பலாத்காரத்தின் பின் இவர்கள் எதிர் நோக்கும் கஸ்டங்கள் பிரச்சனைகள் பல வகையானவை:

1) உடல்ரீதியலானது—

பலாத்காரத்தின் பின் தொடரும் வேதனை. பிள்ளையைச் சுமத்தல்,வயது குறைந்த பெண்களுக்கு மேலும் சிரமமானது.

2) உளரீதியானது—

விருப்பின்றி தவிர்க்கமுடியாத நிலையில் கருவைச் சுமத்தல்,பிற்காலத்தில் இது பிள்ளையையும் பாதிக்கக்கூடும்

3) தமது சாதாரண வாழ்க்கையில் உடலுறவு கொள்ள முடியாமை.

4) ஆண்கள் மீதான வெறுப்பு

5) சமுகத்தினால்,மட்டுமல்லாது சொந்தக் கணவனினால், சுத்தமற்றவள் என்று ஒதுக்கி வைக்கப்படுதல்.

இத்தனை கஸ்டங்களுக்கு மத்தியிலும் வாழவேண்டும் என்கின்ற ஒரே விருப்போடு ஒவ்வொரு நிமிடமும் போராடிக்கொண்டிருக்கும் இப் பெண்களின் மீதான பாலியல் பலாத்காரம் எப்போது நிறுத்தப்படப்போகிறது? இவர்களின் பிரச்சனைகள் எவ்வாறு தீர்த்துவைக்கப்படப்போகின்றன?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஊதா

தை – சித்திரை 93 இதழ் 2

நீங்கள் எப்போதும் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.ஆதியிலிருந்தே பெண்களின் கல்வி பற்றிய அக்கறையின்மை இருந்துவரும் சமூகத்திலிருந்து நாம் இடம் மாறியுள்ளோம். வேறொரு நாடு,வேறொரு மொழி உண்மையில் கல்விக்கும்,அறிவு அனுபவத்திற்கும் நல்லதாயினும்,நாம் எங்கோ முடக்கப்பட்டுள்ளோம், இவை எமக்குக் கிடைப்பதில்லை என்பதனை ஒவ்வொரு அகதிப்பெண்ணாலும் உணரமுடியும்.பெண்ணின் ஒவ்வொரு உறவு ரூபங்களும் –தாய்,மகள்,சகோதரி,மனைவி. . . . . – என்பவையெல்லாம் சௌகரியமானது என்ற நினைப்பும் கூட கல்வி,அறிவு, பல்வேறு அனுபவங்கள் என்பவற்றை நெருங்கவிடாது தள்ளிவைக்கின்றன.பெண்ணின் விழிப்புணர்விற்கெதிரான தனது கண்காணிப்பில் அன்புடைய தந்தை,ஆசைக் கணவன்,அன்புச் சகோதரன். . . எல்லோரும் அவதானமாகவிருக்கிறார்கள் என்பதை நாம் பல தடவைகள் பார்க்கத்தவறிவிடுவதுண்டு.அந்நிய சூழலில் கலந்துரையாடல்கள்,கலாச்சார நிகழ்வுகள்,சந்திப்புக்கள் போன்றவையெல்லாம் எமது கல்வி,கேள்வி ஞானங்களைப் பெருக்கும் ஆரம்பமுயற்சிகளாகும்.எமக்கெனப் பாடசாலைகளா திறந்திருக்கின்றன? இல்லையே! இதனாற்றான் எமது தேடலை இங்கே தொடங்குவோம்,எங்கே அந்த விழிப்புணர்வு என்று தேடுவோம்.வாழ்வு அதற்குள் இருக்கத்தான் வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஓ! நல்ல வடிவா வெளிக்கிட்டிருக்கிறீர். எங்க போப்போறீர்?"

"ஏன் நான் காலமையும் உங்களுக்குச் சொன்னனான் தானே இண்டைக்கு ஒரு கூட்டத்துக்குப் போறனெண்டு."

"ஓமோம், நீர் சொன்னனீர் தான், நான் மறந்து போய் சங்கக்கூட்டமெல்லே வைச்சிட்டன்."

"உங்களுக்கு ஒவ்வொருநாளும் ஒரு கூட்டம்... நான் எத்தினைதரம் சொன்னனான்... "

# பொறுத்தது போதும்



லதா கொஞ்சம் கோபத்துடன் ஆரம்பிக்க, தேத்தண்ணி குடித்துக கொண்டிருந்த றஞ்சித்

"இவ்வளவு கோபம் வேண்டாம்" என்றபடி கிட்ட வந்தான்.

"கோவிச்சால் கிழவியாய் போய்விடுவீர். உமக்குத் தெரியுந்தானே எங்கட சங்கத்தில உள்ள பிரச்சினையள். அதுதான் ஒரு அவசரக்கூட்டம் வைக்கவேண்டி வந்தது."

"ஏலாது! ஏலாது!! விடவே ஏலாது!!! இண்டைக்கு நான் போறது போறதுதான்." என்றாள் லதா.

"எங்க இந்த கூட்டம்...? எத்தினை மணிக்கு...? எத்தினைபேர் வருகினம்....? "

"ஆறு மணிக்கு கருணாவின்ர வீட்டில. பத்துப்பேரளவில வருகினம்."

"ஓ...ஓ... வருவினம்..வருவினம்....பத்துப்பேர்" என்றான் றஞ்சித் நக்கலாக.

"விசரி..." என்றபடி நக்கலாக மீண்டும் சிரித்தான். "இரண்டு சின்னன்களையும் கூட்டிக்கொண்டு போறீரோ?"

"இல்லையில்ல" என்றாள் லதா அவசரமாக. "நான் தனியத்தான் போறன். இரவுக்கு இடியப்பம் அவிச்சு வைச்சிருக்கு. சம்மி தனியச் சாப்பிடுவா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சின்னவனுக்குத்தான் ஒரு வாழைப்பழத்தோட தீத்துங்கோ. சாப்பிடாட்டிக் கொஞ்சம் பால் கரைச்சுக் குடுங்கோ."

"என்னால ஏலாது. உந்தப் பெடியனோட என்னால ஆடேலாது. அவனுக்குச் சாப்பாடு தீத்துறது கஷ்டமான விஷயம். நீர் தான் இதுகளுக்குச் சரி. அப்பிடியெண்டால் நீர் சின்னவனைக் கொண்டுபோம். நான் சம்மியைப் பாத்துக் கொள்ளுறன்" என்ற றஞ்சித் தொடர்ந்து,

"நான் எட்டு மணியளவில போகவேணும். நீர் அதுக்கிடேல வந்திடுவீர்தானே?" என்றான்.

"இல்லையில்ல.... இண்டைக்கு நான் வரக் கொஞ்சம் லேற்றாகும் எண்டபடியாலதான் இராச்சாப்பாடும் செய்துவைச்சனான்"

"அவ்வளவு லேற்றா வர என்ன செய்யப்போறீர்...? அப்பிடியெண்டால் நீர் ரெண்டு பேரையும் கொண்டு போம்."

"சம்மி நாளைக்கு வெள்ளன எழும்பவேணும், கின்டர் கார்டனல்லே." என்றாள் லதா.

"விதுரனுக்கும் இண்டைக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லைப் போல. நாள் முழுக்கக் கரைச்சல் குடுத்துக் கொண்டிருந்தவன்."

"என்னது...? அப்ப அந்தச் சுகமில்லாத பிள்ளைய விட்டிட்டு நீர் போப் போறீரோ....? பிள்ளையள் கொஞ்சம் வளர மட்டும் உந்தக் கண்டறியாத கூட்டங்களையெல்லாம் விடும். கேட்டுதே உமக்கு...? நான் நல்ல மாதிரித்தான் உமக்குச் சொல்லுறன்..." என்று எச்சரிக்கும் தொனியில் சொல்லிக் கொண்டே அவளைப் பார்த்தான் றஞ்சித்.

"ஓமோம் நெடுக நான் தான் நீங்கள் சொல்லுறபடியெல்லாம் கேட்கவேணும்.....

இப்ப ஆறு வருசமா ரெண்டு பிள்ளையளோட வீட்டில கிடந்து கஷ்டப்படுறன்....

இருந்திட்டு ஒருநாள் பிள்ளையைப் பாக்கச் சொன்னால் இப்பிடித்தான்....."

www.tamilarangam.net

றஞ்சித் கோபமாகப் பார்த்தான்.

"பயந்து பயந்து இவ்வளவு நாள் நான் இருந்தது காணும்.மனுசருக்கு இனியெண்டாலும் விரும்பின இடத்துக்குப் போறத்துக்கு கொஞ்சம் சுதந்திரம் வேணும்..."

"இப்ப உமக்கு என்ன சுதந்திரம் இல்ல...? நீர் கேக்கிறதெல்லாம் குடுக்கிறன்தானே? என்னெடி மற்ற ஆம்பிளையள் மாதிரி உனக்குக் கைநீட்டுறனானே...? அந்தக் கருணான்ர,தயாவின்ர புருஷன்மார் மாதிரி....?"

"எல்லாம் ஒண்டுதான்.நானென்ன இஞ்ச சந்தோசமாவே இருக்கிறன்? உங்களுக்கும் மற்ற ஆம்பிளையளுக்கும் வித்தியாசம் இருக்கெண்டோ நினைச்சியள்....?

நானும் காலமையில இருந்து ராத்திரி வரை இந்த வீட்டில மாடு மாதிரி முறியிறன்...நீங்கள் வெளியில வடிவாப் பெண்விடுதலை பற்றி வாய்கிளியக் கதைச்சுக்கொண்டு திரியுங்கோ!"

"எடி மடைச்சி..! உனக்கு என்ன வேணுமிப்ப?" என்று கத்தினான்.

" ஓமோம்.நீங்கள் சொல்லுறபடியெல்லாம் இனியும் ஆடிக்கொண்டிருந்தால் மடைச்சிதான். உங்களுக்கும் நெடுக நான் மடைச்சியெண்டும் நீங்கள் கெட்டிக்காரனெண்டும் உலகத்துக்குக் காட்டத்தானே விருப்பம்."

"ஓ..!, அப்பிடியோ? அப்ப இண்டையில இருந்து நானும் மற்ற ஆம்பிளையள் மாதிரி இருக்கத்தான் போறன்."

"இனியென்ன இப்பவே அப்பிடித்தான். மற்ற ஆம்பிளையள் தங்கட சொரூபத்தை உலகத்துக்குக் காட்டிப் போடுவினம். ஆனால் உங்களைப் போல ஆக்கள் போலி முகமூடி போட்டுக் கொண்டெல்லோ திரியினம்..."

"ஓமோம் .. காணும்.. வரவர வாய் கூடிப் போச்சு. பொத்து வாய்!"

"ஏன் நான் வாயைப் பொத்த வேணும்? அதுதானே நான் சொன்னனான் உங்களுக்கும் மற்ற ஆம்பிளையளுக்கும் வித்தியாசம் இல்லையெண்டு.நான்

www.tamilarangam.net

இதுகளெல்லாம் செய்யாட்டி நீங்கள் எங்க?,...

நீங்கள் வெளியில காட்டுற போலித் தோற்றமெல்லாம் நெடுக நான் மடைச்சி மாதிரி வாயைப் பொத்திக் கொண்டு இருக்கிறபடியால்த்தான்...

நான் உங்களுக்குக் குடுக்கிற ஒத்துழைப்பையெல்லாம் சேவையெண்டு எடுக்கமாட்டியள்.இந்த விட்டில எனக்கு இருக்கிற மதிப்புக்கூடச் சட்டப்படி உங்கட மனுசியெண்டதுதான். நீங்கள் செய்யிறதெல்லாம் சரிதானோ எண்டு கொஞ்சம் யோசிச்சுப்பாருங்கோ."

றஞ்சித் இடைமறித்து,

**சிங்கள மூலம்: மல்லிகா**

**தமிழில் : தேவிகா**

"சொன்னாப்போல நாளைக்குப் போட சேட் இருக்கோ?"

"அங்க தோச்சு வைச்சிருக்கு.வேணுமெண்டா அயன் பண்ணி எடுங்கோ. நான் எங்கையும் போகவெளிக்கிட்டால் அது செய்ததோ? இது செய்ததோ? பிள்ளையைக் கொண்டு போறியோ? எண்டு விசாரணை. நீங்கள் கூட்டத்திற்கு போகேக்கை பிள்ளையளைக் கொண்டே போறனீங்கள்? அல்லது நீங்கள் எங்க போறனீங்கள்? எத்தினை மணிக்கு வருவீங்கள் எண்டு நான் கேக்கிறனானே?"

"நான் வேலைக்குப் போறனான்." என்றான் றஞ்சித்.

"நீங்கள் ஒபிசுக்கு மட்டுமே போறனியள்?....

நானும் வாறவருசத்தில இருந்து ஏதும் வேலைக்குப் போப்போறன்....."

"பிள்ளையளைப் பாக்கிறதும் புருஷனுக்குப் பணிவிடை செய்யிறதும் பொம்பிளயளின்ர கடமை" என்றான் றஞ்சித்.

"ஆம்பிளயளுக்கெண்டும் கடமையள் இருக்கு தெரியுமோ? ஒரு பிள்ளைக்கு தாய் மட்டுமில்ல, தகப்பனும் இருக்கிறார்தானே, தாய்ப்பாசம் மட்டும் பிள்ளைக்கு காணாது.தந்தைப்பாசமும் தேவை..."

www.tamilarangam.net

"இப்பிடிக் கதைச்சுக் கொண்டிருந்தால் கூட்டத்துக்குப் போக ஏலாது." லதா எழும்புகிறாள்.

"ஓகோ!.. நீர் பெண்விடுதலை தேடியோ போறீர்...? றஞ்சித் நையாண்டியாகச் சிரித்தான்.

"இவ்வளவு சுகமா பெண்விடுதலை தேடேலாது. நாங்கள் இவ்வளவு கஷ்ரத்துக்குள்ளேயும் ஒண்டு சேர்ந்து ஏதாவது செய்ய வேணுமெண்டு முயற்சி செய்யேக்கையே எவ்வளவு தடை. இதைப்பற்றி நாங்கள் பொம்பிளையள் மட்டுமில்ல ஆம்பிளையளும் யோசிக்க வேணும்."

இவ்வளவு நேரமும் நித்திரையாய் இருந்து எழும்பி வந்த் விதுரன் தாய் வெளிக்கிட்டிருந்ததைக் கண்டு, "அம்மா!... எங்க போறீங்கள், நானும் வாறன்" என்றபடி சீலையைப் பிடித்து இழுக்கும் போது தடக்குப்பட்டு விழுந்தான்.

விழுந்து அழுத பிள்ளையைத் தூக்கினான் றஞ்சித்.

"சீச்சீ அழக்கூடாது.பொம்பிளப்பிள்ளையள் மாதிரி அழ வெட்கமில்லயே? அப்பா அழுகிறவரே? இல்லைத்தானே?"

தனக்குள் சிரித்தபடி படியிறங்கினாள் லதா.

அழுகையை நிறுத்திய மகனை அணைத்துத் தூக்கியபடி "நாங்கள் அம்மா வரும் மட்டும் விளையாடுவம். உங்களுக்குப் பசிக்குதே?" என்றபடி மகளைக் கூப்பிட்டு "சம்மி.. தம்பின்ர காரையும், உங்கட சட்டிபானைகளையும் கொண்டு வாங்கோ. நாங்கள் விளையாடுவம்" என்றான்.

**முன் அட்டை ஓவியம் :சாம்சன் – பிரான்ஸ்**
**ஏனைய ஓவியங்கள் படங்கள் : சந்திரன் – ஜெர்மனி**
Manushi,India



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலாசாரம் எனும் பூச்சாண்டி

**தேவா**

"தமிழர்கள் நாம் தமிழ்க் கலாசாரத்தை,மொழியை,கலைகளைப் பேணவேண்டும்; தாய் நாட்டை விட்டு தொலைவில் இருந்தாலும் இவைகளை வளர்த்துப் பிற்காலச் சந்ததிக்கும் அதன் சிறப்புகளைச் சொல்லித் தரவேண்டும்; ஒருக்காலும் எமது பண்பாட்டை நாம் மறந்து, மறுத்து விடலாகாது." போன்ற உரத்த குரல்களை ஐரோப்பாவில் மட்டுமல்லாது கனடா, அவுஸ்திரேலியாவிலும் இருந்து கேட்கக் கூடியதாக இருக்கிறது.

முதலில் மொழி,கலையை எடுத்துக் கொண்டால்,இவ்விரண்டும் பலதரப்பட்டு மருவி,தழுவி,மேலும் உயிர்ப்படைந்து வரும் ஆரோக்கியமான முன்னேற்றத்தைக் காட்டி நிற்கின்றன.

ஆனால் கலாசாரம் எனும் போது

அது எந்த வகைத் தோற்றம் கொண்டது?

அதன் இயல்புகள் எவை?

அதன் பொருள் தான் என்ன?

என்பவற்றுக்குரிய பதில்களைத் தேட வேண்டியிருக்கிறது.

முன்னைய காலத்தில் தமிழ்க்கலாசாரம் நகரங்களைக் கட்டி சரித்திரங்களைப் படைத்திருக்கின்றது. என்றாலும் இன்றைய காலகட்டத்தில் புகலிடத்தில் வாழுபவர்களுக்கு கலாசாரம் பற்றிய குழப்பத்தையே ஏற்படுத்துகின்றது.


விருந்தோம்பல், விட்டுக்கொடுத்தல், ஊரோடு ஒத்துப்போதல், உறவு, நட்பைப்பேணல் போன்ற விடயங்கள் கலாசாரத்தை எடுத்துக் காட்டுபவைகளாக அமைந்தாலும் இவைகளை ஆசியாவைச் சேர்ந்த பல்வேறு இன மக்களும் நடைமுறையில் கொண்டிருக்கின்றனர். இவைகள் தமிழ்க்கலாசாரத்திற்கு மட்டுமே சொந்தமானது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு திருமணம் பேசி முடித்துவைப்பது, ஆணைத் தலைமையாய்க் கொண்டு நடத்தும் குடும்பம்,பெண் வீட்டுக்குள் அடங்கி ஒடுங்கி இருத்தலை அடக்கம் என்று மதித்தல்,பெரியோரைப் பணிந்து போதல்,சாதிக்குள்ளே திருமணபந்தம் என்பவைகளைத் தமிழ்க் கலாசாரம் என்று கொள்வதா அல்லது.....

www.tamilarangam.net

சாதி, திருமண, பூப்புனித, குழந்தை பிறப்புநாட்கணக்கு, மரணசடங்குகள் உள்ளடங்கிய விஷேசங்களை பிரமாதப்படுத்தி விழா நடத்தும் கலாசாரமா தமிழ்க்கலாசாரம் அல்லது சாறி, தாலி, பூ, பொட்டு, வேட்டி,சால்வை,போன்ற புறப்பொருட்களை அடையாளம் தருவதன் மூலம் கலாசாரத்தை வெளிக்காட்ட வேண்டுமா போன்ற சந்தேகங்கள் எழுகின்றன. அவசரம், வசதி, காலநிலையை உத்தேசித்து ஐரோப்பிய உடைகளை ஏற்றுக்கொள்வது தவிர்க்க முடியாதது ஒரு பக்கம் இருக்க,உடைக் கலாசாரம் எம்மவர் மத்தியில் மறைந்து வருவது இயற்கையே. அதேசமயம் ஆண்- பெண் உழைப்பின் இருப்பை மற்றவர்க்கு வெளிக்காட்டும் ஒருவகைக் கலாசாரமாக முன்னேறி வருகிறது. இது எமது நாட்டின் பாணியா என்று கூடச் சந்தேகம் எழுகிறது.

தமிழ்க்குழந்தைகளுக்கு வைக்கும் பெயர்களிலாவது ஒருதனித்துவத்தைக் கொண்டு வைக்கப்படுகின்றனவா என்று நோக்கினால்,அங்கேயும் சில சிக்கல் தோன்றியிருக்கின்றன. புகலிடப் பள்ளிக்கூடங்களில் கூப்பிட வசதியாகவும்,எண்சோதிடத்தைக் கணக்கில் எடுத்தும்,முன்னேற்றத்தின் ஈடுபாடு




என்று தம்மை வெளிக்காட்டிக் கொள்ளவும் என்கின்ற ரீதியில் பொதுப்படையான பெயர்கள் வைக்கப்படுகின்றன.

மேற்கூறியவைகள் தவிர தனிப்பட்ட விழாக்கள் நடத்தி,அயல் வீட்டாரை,நண்பரை பொறாமையில் ஆழ்த்தவேண்டும் என்ற நோக்கங்களோடு செயற்படும், வளர்ந்து,வளர்க்கப்பட்டு வரும் இன்றைய இந்தப் புகலிடத் தமிழ்க்கலாசாரம் ஒரு தொற்று நோயாகிவிட்டது.

தமிழ்க்கலாசாரத்தைக் காப்பாற்றுங்கள்,வளருங்கள் என்று கூப்பாடு போடும் உரத்த குரல்கள் கலாசாரம் பற்றிய விளக்கத்தை இனிமேலாவது முன்வைப்பார்களா?

www.tamilarangam.net

# கடிதங்கள்

ஊதா முதல் இதழ் காணப் பெற்றேன். ஆவலுடன் காத்திருந்த என்னை ஏமாற்றி விட்டீர்களே! இது உங்களை மட்டந் தட்டுவதற்காக எழுதப்படுவதல்ல தட்டிக்கொடுப்பதற்காகவே!

அட்டைப்படத்தில் "பெண்ணின் வலிமை" என்ற எழுத்துக்களை எழுத நல்ல கையெழுத்துடைய ஒரு பெண்கரம் கிடைக்கவில்லையா? ஆங்கிலத்தில் Women's Power என்று எழுதிவைத்தவர்கள் தாங்கள் வதியும் நாடான ஜெர்மனியின் மொழியில் எழுதவில்லையே ஏன்? சிங்கள மொழியில் எழுதியிருக்கிறீர்களே! தேவைதானா?

ஒருசில நண்பர்களைத் திருப்தி செய்யும் நோக்கமா? அல்லது இன்றைய சர்வதேச அரசியல்(சிறீ லங்கா;தமிழீழம் என்ற இரு நாடுகளுக்கிடையிலான யுத்தமும் அதன் விளைவான ஐரோப்பிய தமிழ் அகதிகளும்....)பின்னணியை ஆழ்ந்து பரந்து கொண்ட ஒரு புத்திஜீவி மட்டத்திலான சிந்தனையா?

முன் உள் அட்டையில் குவைத் பெண்களின் வாக்குரிமை கோரிய போராட்டம் பற்றி வெளியிடாமல் அதை வேறு ஏதாவது பக்கங்களில் தந்து அப்பக்கத்தில் தமிழீழத்தில் அல்லது புகலிடத்தில் தமிழ்ப் பெண்களின் நிலை பற்றிய செய்தியைத் தந்திருந்தால் உங்கள் நோக்கத்தைத் மேலும் எடுத்தியம்பியிருக்கலாமே!(தமிழ் மொழியில் வெளிவரும் ஒரு பெண்களுக்கான சஞ்சிகையின் நோக்கம் தமிழ்ப் பெண்களுடன் தொடர்பு கொள்வதாகவே இருக்க முடியும் என்ற நோக்கில் தான் மேற்படி கருத்து முன்வைக்கப்படுகிறது.)

புலம் பெயர்ந்த தமிழீழப் பெண்கள் பெண்விடுதலைக்காக என்று ஒரு பத்திரிகை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியிடுவது வரவேற்கப்படவேண்டியதே! பெண்விடுதலை எனும்போது எதையுமே விளக்காத ஆனால் எல்லாவற்றையுமே உள்ளடக்குகின்ற ஒரு (abstract)சொல்லாகவே கருத்துத் தொனிக்கிறது.உங்கள் கருத்தை வெள்ளிடை மலையாக முன்வைக்கவேண்டும் என்று


# ஊதா

காலாண்டிதழ்

ஆண்டு சந்தா: 15 DM

ஆக்கங்கள் விமர்சனங்கள் சந்தாக்கள் மற்றும் சகலதொடர்புகட்கும்:
"UUTHA"
Aller Welt Haus
Potthofstr.22,
5800 Hagen 1






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வலியுறுத்துகிறேன்.‘குண்டுருளும் பாதை’சிறுகதை நன்றாக இருந்தது;அடிப்படைக்கருத்து.மொழிமாற்றம் செய்யும்போது எந்த மொழிக்கு மாற்றப்படுகிறதோ அந்த மொழியின் அழகுகெடாமல் அந்தமொழியில் வாசிப்பவருக்கு ஆர்வம் கொடுக்கும் விதத்தில் எழுதப்பட வேண்டும்.§ 218 வது சட்டம்;கருச்சிதைப்பு என்பவை பற்றிய ஆக்கங்கள் இன்று இந்த நிலையில் தமிழ்ப் பெண்களுக்குத் தேவைதானா?

ஆண் என்பதால் நான் இப்படிக் கேட்கவில்லை.எமது பெண்களின் இன்றைய சூழ்நிலை என்ன; நாளாந்த வாழ்க்கைச் சிக்கல்கள் என்ன என்ற கேள்விகளை எழுப்பிப் பார்த்தால் கருச்சிதைப்பு என்பது இறுதி அத்தியாயங்களுள் ஒன்றாகவே அமையுமென்பது என்கருத்து.‘நண்டு’ கவிதையின் உட்கருத்தோ அல்லது பேருக்கான விளக்கமோ எனக்கு விளங்கவில்லை.பிரஞ்சு மூலக்கவிதையில் ஆசிரியர் கூறியதை தமிழ் மொழிபெயர்ப்பின்போது கைதவற விட்டோமா? அல்லது bபிறவேரை விளங்கிக் கொள்ளும் பக்குவம் எனக்கு இல்லையோ என்னவோ Alice Walker; Angela Davis போன்ற எழுத்தாளர்களைப்பற்றிய செய்திகளை வெளியிட்ட "ஊதா"விற்கு நன்றிகள் பல.

"பெண்ணாகவிருப்பதாலும் கறுப்பு நிற இனமாக இருப்பதாலும்" என்று எழுதியதைப் போலவே...

பெண்ணாகவிருப்பதால் அதுவும் தமிழ்ப்பெண்ணாக இருப்பதால்- அதிலும் அகதியான தமிழ்ப்பெண்ணாக இருப்பதால்-என்று சிந்தித்து ஊதா அதற்கேற்ப செயற்படவேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

"அமைப்பாவது என்பது..."என்ற கட்டுரையில் உமாவின் வரிகளை ஊதா ஆசிரியர் குழு மீண்டும் அதிகவனத்துடன் வாசிக்கவேண்டும்."தம்முன்னுள்ள பிரச்சினைகளுக்கமையவே.. ."என்று தொடங்கும் இடத்திலிருந்து இறுதிவரி வரை அனைத்தும் நூறு வீத உண்மைகளே .இவைதான் ஊதாவிற்கு வழிகாட்டலாக அமையும்.அ-து:நான் முன்னரே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூறியபடி புலம் பெயர்ந்த தமிழீழத்துப் பெண்கள் மத்தியில் தமிழ் மொழியில் வெளிவரும் ஒரு சஞ்சிகை... அதுவும் தமிழ்ப் பெண்களை ஆசிரியர்குழுவாகக் கொண்ட ஒரு சஞ்சிகை புலம்பெயர்ந்த தமிழீழத்தின் தேவைகள் என்ன; சிக்கல்கள் என்ன என்பதை அறிந்து அத்தேவைகளை,வெற்றிடங்களை நிரப்ப முன்வராவிட்டால் ஊதா வெறும் நட்புக்காகச் சிலரால் வாசிக்கப்படும் ஒரு சஞ்சிகையாகவே இருக்குமென்று அஞ்சுகிறேன்.பின் அட்டையில் செல்வி;ராஜனி போன்றோரை சந்தித்த நாம் அடுத்து வரும் இதழ்களில் அன்னை பூபதி,கஸ்தூரி மற்றும் பெண் போராளிகளையும் சந்தித்தால் நடுநிலையில்வெளிவருகிறது ஊதா! என்ற கருத்தை நிலைநாட்டுவீர்கள் இல்லையேல் பெண்விடுதலையென்றும் பெண்களுக்காகவென்றும் கூறிடும் நீங்கள் கேவலம் உங்கள் கருத்தை (முன்னரே குறிப்பிட்டிருந்தேனே அரசியற் பின்னணியென்று) நிலைநாட்டப் பெண்களைப் பகடைக்காய்களாக்கி வார்த்தை ஜாலங்கள் புரிவதன் மூலம் எப்போதோ உருவாகிவிட்ட அந்த அதே குட்டையில் ஊறிவிட்ட மட்டைகள் தான் என்றே கருதவேண்டிவரும்.

நான் ஒரு ஆண்.பெண்விடுதலை பற்றி ஆங்கிலம்,ஜெர்மன்,தமிழ் மொழிகளில் வாசித்திருக்கிறேன்.ஆனால் விடுதலையடைந்த தமிழ்ப்பெண் எப்படியிருப்பாள் என்று சிந்தித்துப் பார்க்கும் போதெல்லாம் என் கற்பனையில் அவள் விடுபட்டுப் போகிறாள்.என்னைப் போன்றவர்களுக்காக விடுதலை என்றதுமே ஐயத்துடன் பார்க்கின்ற பல்லாயிரக்கணக்கான புலம்பெயர்ந்த தமிழீழப்பெண்களுக்காக புதுமைப்பெண் எப்படியிருப்பாள் என்று பாடியிருந்தாரே பாரதியார் அதைப்போல விடுதலையடைந்த பெண்ணின் வாழ்க்கையில் ஒருநாள் என்ற ரீதியில் அவளை எங்களுக்கு அறிமுகம் செய்து வையுங்கள் அப்போது தான் abstract ஆக இருக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்விடுதலை என்ற பதத்திற்கு absolute கருத்து எமக்குக் கிடைக்கும்;செய்வீர்களா?

Kastel

பாலவடிவேற்கரசன்

உங்கள் ஊதா வருடத்திற்கு மூன்று இதழ்கள் தயாரிப்பதற்குப் போதிய அவகாசம் உண்டென எண்ணுகிறேன். இது தொடர்ந்து வரவேண்டும். இலங்கையில் வெளிவந்து கெண்டிருந்த "தோழி", "பெண் எழுச்சி", "பெண்ணின் குரல்" போன்ற இதழ்களின் கதியையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். பெண்ணிலை வாதமென்பது முற்றான ஆண் எதிர்ப்பு வாதமல்ல என்பதை எல்லோரும் உணர்தல் அவசியம். எனவே உங்கள் இதழில் வெளிவரும் ஆக்கங்கள் நியாயபூர்வமாகவும், பெரும்பாலோருக்காவது இலகுவில் புரியக்கூடியனவாக அமைதல் அவசியம். மேலும் இவ்வியந்திர உலகத்தில், கிடைக்கும் அவகாசத்தில் வாசித்துப் புரிந்துகொள்ளக் கூடியனவாக அமையின் அவை மேலும் சிறப்புறும். நீங்கள் உங்கள் இதழில் இலங்கை மலையகப் பெண்களுக்காகவும் குரல் கொடுக்க வேண்டுமெனத் தாழ்மையுடன் கோருகிறேன்.

மணி இலங்கை


வெளிவந்துள்ளது

**கோசல்யா கவிதைகள்**

கிடைக்குமிடம்:
Kosalya Sornalingam
Leine-Weber Str.8
4330 Mühlheim/Ruhr




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பெண்கள் சந்திப்பு மலர்களில்.......

ந.சுசீந்திரன்

( அகம்

உள்ளத்தின் ஆசைகளைக் கருக்கி கண்ணீர்,மௌனம்,குழப்பம்,தன்னைத் தானே புரிந்து கொள்ளமுடியாத அவலம் என்று தொடரும் சுமைகளைத் தாங்கும் ஓர் ஆசியப் பெண்ணின் உள்ளத்தின் யதார்த்த வார்ப்பு பெண்கள் சந்திப்பு மலர்-2 இல் வெளியாகியுள்ள 'அகம்'எனும் சிறுகதை.தங்கை அழுவதில் நியாயம் இருக்கிறது என்ற ஆவேசக் குமுறலை அடக்கிய மௌனம் தன்னைக் கோழை என்று நினைப்பதுடன் பொத்தி வைக்கப்படுகிறதா?
பாறாங்கல் சாத்திய மனக்குகை மானுடங்கள் சம்பிரதாய ஆரவாரிப்புகளில் இயல்பாகவே இயங்குகின்றன.கல்யாணக் களை அந்த அயல் அட்டங்களின் அசைவுகளில் நெழிகிறது.பொம்பிளை பார்ப்பு,சாறிச்சட்டை-,நகை போடல் ஒத்திகை ஆரவாரங்கள்.விடிந்தால் ராசாத்திக்குக் கல்யாணம் என்று நினைக்க நம் மனம் உடன்படாது தவிக்கிறது.
அளவில் சிறியதாக,ஆனால் சொல்லப்பட்டவை யாவும்,பிரதான பாத்திரத்தின் அகப் புற நிலைகளைப் புரிந்து கொள்ள மட்டும் வந்து,ஓர் இயல்பான ஓட்டத்துடன் சொல்லப்பட்டிருக்கின்றன.
ஒரு நல்ல சிறுகதையை எழுதிய சுவிஸில் இருக்கும் 'சுருதி'யிடம் நல்ல சிறுகதைத் தேர்ச்சி தெரிகிறது.)

சென்ற இதழ் தொடர்ச்சி....

பேய் அரசுகளால் பிணம் தின்னும் மக்கள் ஓடி ஒளிந்து கொள்ளும் புகலிடங்களின் கதை இன்று எம் கதை."புகலிடம் தேடி..." என்று தேவிகா அவர்களின் கட்டுரை ஒன்று.மிகவும் முக்கியமான விடயங்களைத் தன்னகத்தே கொண்ட கட்டுரையானாலும் இதில் ஒன்றிக்க முடியாதிருப்பதற்கு என்ன காரணம்?
ஒன்று இதில் அகதியாகும் பெண்களின் இன்னல்களை,இன்னும் கொடூரமான அளவில் தமிழ்ப் பெண்கள் இன்று எதிர் நோக்குவதால் தேவிகா அது பற்றியெல்லாம் எழுதலாமே என்று நினைத்தல்

www.tamilarangam.net

இரண்டாவது இதில் இவர் கையாண்டுள்ள நடை, மொழிபெயர்ப்பின் போது மூலப்பிரதியின் வசன ஒழுங்கு சரியாக இருக்கவேண்டுமென்பதால் அப்படியே தமிழில் எழுதுவது போன்ற நடை.

தேவிகா அவர்கள் பேசும் போது அல்லது கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போது தெளிவு,எளிமை,சுற்றிவளையாத சுருக்கம் என்பவை சேர்ந்திருக்கும்.இடம்பெயர்ந்த சமூகம் ஒன்று எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகள் பற்றிய அறிவும்,அதில் பெண்கள் படும் அவஸ்தைகளும் தேவிகா நன்கு அறிந்தவை.மதத் தத்துவங்களும் சாதாரண அன்றாட நடைமுறைகளும் பெண்ணுக்கு மதிப்பளிப்பது போல நடித்துக்கொண்டாலும் (உ+ம்:பெண் தெய்வங்கள்,பெண்ணுக்கு முன்னுரிமை)இவற்றுக்கு அப்பால் மனித மனங்களில் ஊறியிருக்கும் பெண்ணைக் கீழாக மதிக்கும் தன்மை, பாலியல் வன்முறை வெறி போன்றவை முழுச் சமூகத்தின் வெளிப்பாடாக போர்களின் போது பன்மடங்காகிவிடுகிறன.போர்ச் சூழலும் பெண்களும் என்ற சந்திப்பு மலர்-1 இல் உள்ள இவரது கட்டுரையில் உன்னிப்பான சில விடங்களைச் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார்.'பெண்கள் வட்டம்','நமது குரல்' ஆகியவற்றில் தேவிகாவின் அதிக மொழிபெயர்ப்புக் கட்டுரைகள்,கருத்துரைகள்; பெண்கள்,பெண்ணிலைவாதம் பற்றிய பல பரிமாணங்களை எமக்கு அறிமுகப்படுத்தியிருக்கின்றன.


காட்டு மிராண்டி ஆண் ஆதிக்கம் இருந்து வருகின்ற சூழலில் பெண்ணின் விடுதலைக்கான போராட்டம், அதுவும் ஐரோப்பியச் சூழலில் தமது சொந்த மண்ணைவிட்டு அந்நியப்பட்டு வாழ்கின்ற தமிழ்ப்பெண்கள் மத்தியிலிருந்து எழுகின்ற பெண்விடுதலைக்குரல்களை வெறுமனே ஐரோப்பியச் சீரழிவுக் கலாசார சூழலை எதிர்கொள்வதற்காகவே ஒலிக்கின்றன('ஓசை' யில் "ஐரோப்பாவில் நாங்கள்" எனும் கட்டுரையில் ரதி) என்று எழுந்தமானமாகக் கருத்துச்சொல்லும் அவசரக்குடுக்கைத்தனம் தம்மை முற்போக்காளர்கள் என்று கருதிக்கொள்ளும் பெண்களிடமிருந்தே கிளம்புகின்ற போதும்,பல்வேறு களங்களில் சிறு சிறு சலசலப்பாகக் கூடக் கருதப்பட்டாலும் தொடர்ந்து செய்யப்படவேண்டியது.

கீழைத்தேயப்பெண்களிடையேயான உறவு இறுக்கமானது.தாய்,மகள்,சகோதரிகள்,சித்தி,சிநேகிதி......என்று உள் உறவுகளும்;ஊர்,கிராமம்,நகரம் என்ற வெளி உறவுகளும் ஐரோப்பாவை விட பெண்களினுடைய கூட்டுக்குச் சாதகமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இருக்கின்றன.ஆனாலும் இங்கு ஐரோப்பாவிலேயே பெண்கள் அமைப்பாகி இயங்குவதான மயக்கம் ஏற்படுகின்றது.மேலும் ஒருசில ஐரோப்பியப் பெண்நிலைவாதிகள்,பெண் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் இந்தியா போன்ற நாடுகளுக்குச் சென்றால் அங்குள்ள பெண்களுக்குப் படிப்பிக்க விரும்புகிறார்களே தவிர அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள இவர்களது மேற்கத்தைய மேல்நிலைவாதம் இடங்கொடுப்பதில்லை.இந்தநிலை மாற,புகலிடத்தில் இழந்துபோன நெருக்கமான உறவுகளைப் புனரமைக்க பெண்கள் சந்திப்பும், இந்த மலர்களில் எழுதிய பெண்களைப்போலவே இன்னும் இன்னும் அனேகரை இவை பற்றியெல்லாம் சிந்திக்கச் செய்ய பெண்கள் சந்திப்பு மலர்கள் வழிவகுக்கவேண்டும்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கமலா காத்திருக்கிறாள்

பாதி ஜடமாக மனதுக்குள்ளே உருகித் தவித்தபடி படுக்கையோடு படுக்கையாக சாய்ந்திருக்கும் தன் கணவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.அவள் கண்களில் கண்ணீர் இல்லை. வற்றி விட்டதா? அவள் இதயத்தைப் போல கண்களும் மரத்து விட்டனவா? எட்டு வருடங்களாக அவள் அனுபவிக்கும் வேதனையின் வடிகால்களாக இருந்த கண்ணீர்,அழுகை எல்லாம் என்றோ தொலைந்து விட்டது.மிஞ்சியிருப்பது என்ன? வாழ்க்கை அவளைப் பொறுத்தவரை பூஜ்யம்தான்.

தன் முன்னால் இடுப்புக்குக் கீழே உணர்வுகளை இழந்து தனித்து இயங்க முடியாத கையாலாகாத்தனத்தால் தனக்குள்ளேயே வெதும்பும் அவனையே பார்க்கிறாள்.

பெரியவர்கள் விதியென்று சுலபமாகச் சொல்கிறார்கள்.விதியை யார் நிர்ணயித்தது? கடவுள் என்றால் எனக்கு விதித்த விதி தூக்குக் கயிற்றைவிட கொடுமையானதே! ஆண்டவனுக்கு என்மேல் ஏன் இவ்வளவு குரோதம்? சாகும்வரை அழு என்று சபிக்க நான் செய்த தவறுதான் என்ன?

ஏதேதோ சிந்தனையில் உழன்றாள் கமலா.

பருத்தித்துறையை அடுத்து ஒரு சிறு கிராமம்.ஆஸ்பத்திரி,பாடசாலைகள்,போக்குவரத்து வசதிகள் அனைத்தும் கொண்டது. வசதியான குடும்பம்.அவளின் இளமைக் கனவுகளும் வசதியாக செழிப்பாக வளர்ந்தது.தந்தை அவளின் மனதைப் படம் பிடித்தது போல் தேடிக்கொண்டு வந்தார் மணாளனை, அவன்தான் முரளி.தன் ஆசைகளின்,கனவுகளின் மொத்த உருவமாக முரளியைக் கண்டு மகிழ்ந்தாள் கமலா.இருவரும் அனுபவித்த இன்பமெல்லாம் வெறும் ஒருவருடம்தான் என்று யார்தான் நினைத்தார்கள்.

அன்று வீடே அல்லோலகல்லோலப்பட்டது.கமலா-முரளியின் குழந்தை பிறந்து 31நாள் வீடு நிறைந்த விருந்தாளிகள் உறவினர்கள்.குழந்தை பிறந்ததிலிருந்து மனைவியை ரகசியமாக சந்தித்து மனம்விட்டு பேசவோ தன் சந்தோசத்தைப் பகிர்ந்திடவோ சந்தர்ப்பம் கிடைக்காமல் எப்பவும் மாமி அல்லது கமலாவின் தங்கைகள் தம்பிகள்.பிரசவித்ததிலிருந்து சுதந்திரமாக அவளை நெருங்கமுடியாத தாபம்.இதே நிலையில் தான் கமலாவும் இருந்தாள்.அம்மா மீது அவளுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோபம் கோபமாக வந்தது . பெண்களுக்குக் கல்யாணம் ஆகும் வரைதான் சிறை.குழந்தை பிறந்த பின்புமா? அப்படியென்ன நாலூறு என்று தாயையும் சேயையும் அடைத்து வைப்பது.மற்றவர்கள் இருக்கட்டும். கணவன் கூடவா? பச்சை உடம்பு என்று சதா காவால் இருந்தாள் அம்மா.கண்மூடி, சிந்தனையில் இருந்தவளைக் கலைத்தது முரளியின் குரல்.
"நித்திரையா?"மௌனித்தாள். கோபம்.

"கோபமா?"
"பின்ன என்ன? என்னடா மனுசியையும் பிள்ளையையும் எட்டிப்பார்த்து என்ன ஏது எண்டு விசாரிக்கக்கூட ஐயாவுக்கு நேரமில்லையா?"
"ஐயாவுக்கு நேரமும் இருக்கு. எப்பவும் உமக்குப் பக்கதிலை இருக்க ஆசையும் இருக்கு. நந்திபோல உம்மடை அம்மா எப்பவும் நடுவில நிண்டால் நான் என்ன செய்யிறது?"
"சரி இப்ப அம்மாவை எப்பிடி ஏமாத்தினியள்?"
"அதையேன் கேட்கிறீர். பக்கத்துக்கடையிலை நல்லெண்ணை இருக்குது அது சரியில்லையாம்.நான் இப்ப போய் ரவுணில செல்லையா அண்ணை கடையிலை எண்ணை வாங்கிக் கொண்டு வரவேணுமாம்" முரளி சொல்லிக்கொண்டிருக்கும்போதே கழுகுக்கு மூக்கில் வேர்த்ததுபோல் செருமிக்கொண்டு உள்ளே நுளைந்தாள் கமலாவின் அம்மா.
"என்ன தம்பி நீங்கள் கடைக்குப் போட்டியளாக்கும் எண்டு நினைச்சன். நீங்கள் என்ன செய்யிறியள்?"
"கமலாட்டச் சொல்லிவிட்டுப் போவமெண்டு..."
"சரி சரி கெதியாப் போங்கோ ஊர் இருக்கிற நிலமையில எப்ப ஷெல் விழும் எப்ப குண்டு வெடிக்கும் எண்டு சனங்கள் சரியா கடையையும் திறக்கிறேல்ல.நீங்கள் போறதுக்குள்ள செல்லையா அண்ணை கடையை பூட்டப்போறார்."திரும்பி நடக்கும் மாமியின் முதுகுக்குப்பின்னால் நாக்கை நீட்டி முகத்தைக் கோணலாக்கி அழகு காட்டியவரைப்பார்த்து கமலா வாய்விட்டுச்சிரித்தாள்.இதுதான் அவள் கடைசிச்சிரிப்பு என்று அவனோ அவளோ அப்போது அறிந்திருக்கவில்லை.விதி எண்ணை ரூபத்தில் அவனை விரட்டியதை மாமியும் அறிந்திருக்கவில்லை.
கடையில் நல்லெண்ணை வாங்கி வர மோட்டார் சைக்கிளை நெருங்கியவன் பல குரல் கேட்டு கலவரத்தோடு திரும்புகையில்....துப்பாக்கிகள் வெடிக்கும் சத்;தம் சீலீரென எண்ணை போத்தில் தரையில் சிதற....பார்வை மங்கலாக

www.tamilarangam.net





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கமலாவின் நினைவுடனே மயங்கிச் சரிந்தான் முரளி.
யாருக்கோ குறிவைத்த குண்டு நிரந்தரமாக தான் குடியிருக்கும் முரளியின் முதுகில் கீழே முள்ளந்தண்டில் ஒரு இடத்தை தேர்ந்தெடுத்தது தான் விதியோ? உடலில் வேறெங்காவது அவன் தாக்கப்பட்டிருந்தால்கூட பிளைத்து நடமாடியிருக்கக்கூடும்.அழுது அழுது ஓய்ந்தாள் கமலா.குண்டு அகற்றப்பட்டால் கணவனின் உயிர் பிரிவது நிச்சயம்.எதுவும் செய்ய இயலாது கை விரித்தனர் சத்திரசிகிச்சை நிபுணர்கள்.
மெல்ல மெல்ல இடுப்புக்குக்கீழே உணர்வுகளை இழக்க ஆரம்பித்தான்.படுக்கையிலே மலம் சலம் கழிப்பதை உணராமல் அதை சுத்தம் செய்யும் மாமாவையும் மனைவியையும் பார்த்து கண்ணீர்விட்டு அழுதான் அந்த ஆண்மகன்.அன்பாக குழந்தையை மனைவியை அணைக்க கைகள் செயற்படுவதும் அந்த ஆண்டவனுக்கு பொறுக்கவில்லைப் போலும். முரளியின் வலதுகையையும் ஜடமாக்கினார்.
உலகில் உள்ள சோகமெல்லாம் அந்த விட்டில் குடியேறியது போல் எங்கும் இருள்,அமைதி,மனங்களின் இறுக்கம்.அந்த சோகம் அண்டை அயலாரையும் தொற்றிக்கொண்டது உண்மை.மகளை கண்டபோதெல்லாம் கலங்கினார் தந்தை.எந்தத்துன்பத்துக்கும் சோதனைகளும் ஓர் எல்லை உண்டு ஓர் முடிவுண்டு. கமலாவைப் பொறுத்தவரை அது தொடர்கதையானது. ஆண்டுகள் உருண்டோடின.ஏழு வருஷங்களை முழுமையாக விழுங்கியது சோகம்.
வானத்தை வெறித்தபடி கிணற்றடியில் உற்காந்திருந்தவளின் தோளில் ஆதரவாக கைபட நிமிர்ந்து பார்த்தவள்,தந்தை தன்னிடம் எதையோ சொல்லத்தயங்குவதை புரிந்துகொண்டாள்.
"என்னப்பா"
"தம்பியின் நிலைக்கு காரணமானவை நேற்று இஞ்ச வந்தவை பிள்ளை"
"தம்பி படுகிற கஷ்டம் பொறுக்கமுடியல்ல.. அவரோட நீயும் படுகிற கஷ்டம் என்னால தாங்க முடியேல்ல பிள்ளை...குரல் உடைந்து அழத் தொடங்கினார்.
"அவை சொல்லினம் இனி ஒண்டும் செய்யேலாது....
அவருக்கும் சித்திரவதை... உங்களுக்கும் கவலை அதால..."
"அதால...?
எப்படி சொல்வதென்று தயங்கியபின் மௌனமானார்.
"சொல்லவந்ததை சொல்லுங்கோ"
"அதால...அவரை முடிச்சிட்டால் என்ன எண்டு"....
சொன்னது தன் தந்தைதானா என்பதை நம்பமுடியாமல் அதிர்ச்சியுடன் அவரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏறிட்டாள்.அவர் கூறியதை ஜீரணிக்க பல மணி நேரமானது கமலாவுக்கு.
"அப்பா இது நீங்கள் எனக்கு சீதனமா குடுத்த வீடு எண்ட உரிமையில தான் இருக்கிறன் எங்களை நீங்கள் பாரமா நினைச்சால் சொல்லுங்கோ இப்பவே இவரையும் பிள்ளையையும் கொண்டு எங்கேயாவது போறன்."
"அழுதா பிள்ளை ஏதோ அவங்களும் உன்ரை நன்மைக்குத்தான் சொல்றாங்கள் எண்டு சொல்லிப்போட்டன் ஒண்டையும் மனதில வையாதே கடவுளில பாரத்தைப் போட்டிட்டு இருப்பம். வேற என்ன செய்யிறது?"
துண்டால் கண்களைத் துடைத்தபடி சென்ற தந்தையைப் பார்த்தாள் வயோதிபத்தோடு இந்த வேதனையும் சேர்ந்து அவர் மிகவும் கிழவராக தோன்றினார் அவளுக்கு.
உலகில் சாகவும் முடியாமல் வாழவும் முடியாமல் நோயினாலோ அல்லது வேறு எந்த சித்திரவதையாலோ தவிக்கும் உயிரினங்களை கொல்ல சட்டத்தில் இடமுண்டுதான். இதற்குக் கருணைக்கொலை என்று பெயர்(Mercy Killing). அதற்காக அன்பான தன்கணவனைக் கொல்ல எந்த தமிழ்ப் பெண்தான் முன்வருவாள்.தமிழ்ப் பெண் என்ன எந்தப் பெண்ணுமே உடன்படமாட்டாள்.
யாரை நொந்து என்ன.விதி அவள் இன்பமான வாழ்வை ஒட்டு மொத்தமாகக் குத்தகைக்கு எடுத்தபின்னர் இனி மிச்சமாக இருப்பது தான் என்ன.
ஆனாலும் கமலா முற்றிலுமாக நம்பிக்கை இழந்து விடவில்லை.அவள் இதயத்தின் எங்கோ ஓர் மூலையில் நம்பிக்கைக்கீற்று மெலிதாக ஒளிவீசிக்கொண்டுதானிருக்கிறது வைத்தியர்கள் ஏமாற்றிய போதும் விதி கூட வந்து குழிதோண்டிய போதும் கடவுள் மேல் அவள் வைத்த அசைக்கமுடியாத நம்பிக்கையின் பேரில் இன்னும் நடைப்பிணமாக நடமாடிக்கொண்டிருக்கிறாள்.என்றாவது ஒரு நாள் தன் கணவன் கால்களும் கையும் உணர்வு பெறும் என்ற அந்த நம்பிக்கையுடன் காத்திருக்கிறாள் இந்தக் கமலா.!

கருணா

(பெயர்கள் மட்டுமே கற்பனை!)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எழுச்சி

■ பாபு ■

தமிழ்ப் பெண்ணே தமிழ்ப் பெண்ணே எண்ணிப்பார்
உன் தளைகளைத் தினம் தினம் எண்ணிப்பார்
சீதனம் சீர்வரிசை வேண்டுவோர் - உன்னைச்
சிந்திக்க மறுப்பதேனோ எண்ணிப்பார்

பாரம் பரியம் பண்பாடு என்று சொல்லியே
தாலி கூறை வேட்டியென்று பணம் பறிக்கிறார்
தாரமான பின்னாலோ வீட்டுக்குள் வைத்து
தாணியெல்லாம் இங்கிருக்கு என்று சொல்லுவார்

குடும்பப் பொண்ணு குலவிளக்கு வாழ்த்துப் பாடியே
கல்லோடும் புல்லோடும் கட்டியே வைப்பார்
விதவை என்பார் மலடி என்பார் பரத்தையுமென்பார்
வெள்ளைச் சீலை உடுத்தி வைத்து அமங்கலமென்பார்

ஒருவருடன் பழகி நின்றால் பத்தினி என்பார்
பலருடன் பழகி நின்றால் பாதகி என்பார்
இதுதானா பெண்ணின்நிலை எண்ணிப்பார்
இல்லை இல்லை என்று சொல்லி எழுச்சி கொள் !

www.tamilarangam.net

# அந்தரும் அசையும்

**"ஒண்ணாயிருக்கக் கத்துக்கணும்"**

இன்று ஐந்து மணிக்கு எழும்பத்தேவையில்லை. அவசரமாகச் சமைத்துச் சுடச் சுட விழுங்கத் தேவையில்லை.கஷ்ரப்பட்டு சக்தியை முதலாளிகளுக்காக இழக்கவேண்டிய கட்டயாம் இல்லை.சனிக்கிழமையெண்டால் ஒரே புழுகம்தான்!

மெதுவாக அசைந்து மஞ்சள் நிற சஞ்சிகையை எடுத்து தலையணையை முதுகுக்குப் பின்புறமாகத் தள்ளி சாய்ந்து வாசிக்கத் தொடங்கினேன்."ரிங்,,,ரிங்,,,,"மணி ஒலித்தது.

நண்பி வந்து விட்டாள். அவள் வராவிட்டாள் இன்றைய பொழுது நிறைவுபெற்றதாக இருக்காது.

"புதுச் சஞ்சிகை வந்திருக்கே?"சிரிச்சுக் கொண்டே கேட்டாள்.தூண்டில் பெரிய சைசிலை வந்திருக்கு" என்றேன்.

என்னிடமிருந்து தூண்டிலைப் பிடுங்கி எடுத்து பக்கங்களை தட்டினாள்.

"நாங்கள் போனகிழமை பார்த்த 'ஒண்ணாயிருக்ககத்துக்கணும்' பட விமர்சனமே?."கட்டிலில் இருந்து வாசிக்கத் தொடங்கி விட்டாள்.

"நான் உரத்து வாசிக்கிறன்.நீ எனக்கு ரீ போட்டுத்தாடி."

அவளிடம் இருந்து தூண்டிலை மீட்டேன்.

சிரிக்கவும் அதே வேளை சிந்திக்கவும் முடிந்தது.

"எழுதின வடிவம் நல்லாயிருக்கு. ஒரு முக்கியமான விசயம் விடுபட்டுப் போச்சு. மெயின் கதையை மட்டும் விமர்சிச்சிட்டு விடக்கூடாது.கவுண்டமணி,செந்தில் போன்ற பாத்திரங்கள்,அவையள் பகிடி(?)என்று சொல்லுற விசயங்கள் இண்டைக்கு தமிழாக்களின்ர அதிலையும் சின்னப்பிள்ளையளின்ர மனசில நல்லாப் பதிஞ்சிருக்கு.இந்தப்படத்தில செந்திலுக்கு நல்ல பாத்திரம் குடுக்கப்பட்டிருக்கு.கவுண்டமணியின்ர பாத்திரம் கட்டாயம் விமர்சிக்கப்படவேண்டியதும் இனிமேல் தவிர்க்கப்படவேண்டியதும்."நண்பி உணர்ச்சிப் பொங்கலோடு கதைத்தாள்.

www.tamilarangam.net

பிணங்களை எரித்து அதில் கிடைக்கும் பணத்தைக்கொண்டு குடும்ப வாழ்க்கையைக் நடத்தும் கவுண்டமணி தனக்கு பிளைப்பு நடக்கவேண்டுமென்பதற்காக வயோதிபர்களை செத்துப்போகும்படி வெருட்டுவதும் உயிருக்காக போராடிக்கொண்டு இருக்கும் ஒருவர் பிழைக்கக் கூடாது தனக்குப் பணம் கிடைக்கவேண்டும் அதனால் அவர் சாக வேண்டும் என்று விரும்புவதுமான காட்சிகள் கண்ணுக்குள் வந்தன.மனித உயிருக்கு மதிப்பேயற்ற இக்காலத்தில் இப்படிப்பட்ட கருத்துக்கள் மிகவும் ஆபத்தானவை என்று எனக்குத் தோன்றிற்று.
நண்பி தயாரித்துத் தந்த ரீயை உறிஞ்சி உறிஞ்சிக் குடித்துக்கொண்டிருந்தேன்.
"தியேட்டரில மறுபடியும் படம் ஓடுது போவமே?"
"அங்க குடுக்கிற பத்து மார்க்குக்கு மூண்டு வீடியோப்படம் எடுத்துப்பாக்கலாம்."
"நீ சரியான கசவாரம்".
ஓம் நீ சோசல்க்காசை எடுத்துக்கொண்டு சொல்லுவாய் தானே.கஸ்ரப்பட்டு உழைக்கிற எனக்கெல்லோ பணத்தின்ரை அருமை தெரியும்."
"நல்ல படம் எண்டு கதைச்சினம்."ரேஜா படத்தில் நடிச்ச அரவிந்த்,ரேகினி,ரேவதி,நிழல்கள்ரவி நடிக்கினமாம் உனக்கு விருப்பமில்லாட்டி விடுவம்."
எங்கிட அரவிந்தின்ர படமோ? அப்பிடியெண்டாப் போவம்."
நண்பி ஆச்சரியமாக என்னைப் பார்த்தாள்.

## "மறுபடியும்"

கதைச்சுருக்கம்:

நடுத்தரவர்க்கக் குடும்பமான திரைப்பட இயக்குனரும்(நிழல்கள் ரவி)அவர் மனைவியும்(ரேவதி)சந்தோசமாக வாழ்ந்து வருகிறார்கள்.இயக்குனரின் படத்தில் நடிக்கும் ஒரு நடிகைக்கும்(ரோகினி) இயக்குனருக்கும் காதல் ஏற்படக் குடும்பம் பிரிகிறது. இயக்குனர் நடிகையுடன் இணைந்து வாழுகிறார்.வேலைசெய்யும் பெண்கள் விடுதியொன்றில் வாழும் ரேவதிக்கும் சாதாரண பாடகன் ஒருவனுக்குமிடையே நட்பு வளர்கிறது.ரேவதியின் வீட்டில் வேலைகள் செய்த பெண் தனது குடிகார, கொடுமைக்காரக் கணவனைக் கொலை செய்துவிட்டுச் சிறைக்குப்போக ரேவதி அவள் மகளை வளர்க்கும் பொறுப்பை ஏற்கிறாள்.இயக்குனருக்கும் நடிகைக்கும் பிளவு ஏற்பட்டு மீண்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனைவியிடம் வருகிறார்.ரேவதி இணைந்து வாழ மறுக்கிறாள். இறுதியில் பாடகன் தனது காதலை ரேவதியிடம் வெளிப்படுத்துகிறான். அவனது காதலை ஏற்க மறுத்த ரேவதி தனது வளர்ப்பு மகளை வளர்த்தலைக் குறிக்கோளாகக் கொண்டு வாழப்போவதாகக் கூறுகிறாள்.படம் முடிவடைகிறது.

பாலு மகேந்திராவின் இந்தப்படத்தின் கதை வழமையான தமிழ்ச் சினிமாக் குடும்பக் கதைதான்.அவர் இப்படத்தினூடாக என்ன சொல்ல வந்தார்? பதிலை ஒருபுறத்தில் வைத்து விட்டு சில அம்சங்களைப் பற்றிப் பார்ப்போம்.வீடியோவுக்கும்,திரைக்கும் பெரிய வித்தியாசம் உண்டுதான்.கருத்தளவில் பெரிதாக முன்னேற்றம் இல்லாவிட்டாலும்,தயாரிப்பில் முன்னேற்றம் தெரிகிறது.பெரும்பாலான காட்சிகள் இரண்டு வீட்டிற்குள் நடைபெறுகின்றன.சிக்கனம்! அவசியமில்லாத பாத்திரங்கள்,குப்பைப் பகிடிகள் தவிர்க்கப்பட்டுள்ளன.பாடகனாக நடிக்கும் அரவிந்தினதும்,இயக்குனரான நிழல்கள் ரவியினதும் அமைதியான நடிப்பு. ரேவதியை அடிக்கடி அழவைப்பதில் என்னதான் ஆனந்தமோ? சகிக்கமுடியவில்லை.

கணவன் தனது காதலியுடன் இணைந்து வாழ ரேவதி வேலைசெய்யும் பெண்கள் விடுதியொன்றிற்கு வருகிறாள். விபச்சாரத்துக்குட்

தள்ளாமல்,தற்கொலை அல்லது கொலை செய்விக்காமல் பெண் விடுதிக்கு கொண்டு வந்தது வரவேற்கத்தக்கது.
ரேவதியின் வீட்டு வேலைகள் கவனிக்க ஒழுங்கு செய்யப்பட்ட பெண் இருவரும் உரையாடுகையில் தனது அம்மாவும் வேலைக்காரி,அம்மாவின் அம்மாவும் வேலைக்காரி,என்று கூறுவது சிந்திக்கத் தூண்டுகிறது. ("ரோஜா படத்தில் ஐந்து அல்லது ஆறு காட்சிகளில் வந்து மறையும் போராளி ஒருவரின் சகோதரியான, போராளிகளுக்கு சமையல் செய்து கொடுக்கும் பெண்ணைப்பற்றி ஒரு படம் மணிரத்தினம் எடுத்திருந்தால் பிரயோசனமாக இருந்திருக்கும்." என்று நண்பி சொன்னது ஞாபகத்தில் வருகிறது.)
குடிகாரக் கணவனால் துன்புறுத்தப்படும் இப் பெண் தான் சொந்தமாக உழைத்து தன் மகளையும் வளக்கிறாள். அப்படியிருந்தும் அவள் துணிந்து கணவனை விட்டுப் பிரிந்து வாழ்வதாக காட்டுவதற்கு இயக்குனருக்கு துணிவில்லை. எந்தச் சித்திரவதையெண்டாலும் தாங்கிக்கொண்டு இருத்தல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அல்லது தற்கொலை செய்தல்,அல்லது கொலை செய்தல். இதுதான் தமிழ்ச் சினிமா!

படத்தின் இறுதிக்காட்சி அரவிந்தின் காதலை மறுத்த றேவதி சிறுமிக்காகத் தான் வாழப்போவதகாக் கூறுவதாகும். சிறுமி இல்லாவிட்டால் இயக்குனரின் பாடு சிக்கல்தான்.காலங் காலமாக பிறருக்காகவே வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்ப்பெண் எப்போது தனக்காக வாழப்போகிறாள்?

## பேய்களும் பைத்தியக்காரர்களும்

30,1.93 Stuttgart நகரில் இலங்கையர் சங்கம் நடாத்திய கலைவிழாவின் போது றஞ்சித் அவர்களின் "பேய்களும் பைத்தியக்காரர்களும்" என்ற நாடகம் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.இந் நாடகத்தின் காட்சி அமைப்புக்கள் ஜெர்மன் தமிழ் மொழிகளில் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டது.பெண் பாத்திரத்திற்கும் ஆணே தோன்றும் அனேக நாடகங்கள் போல் இல்லாமல் ஆண்களும் பெண்களும் இணைந்து நடித்துள்ளது நாடகத்திற்கு உயிர் கொடுப்பதாக இருந்தது.மேடை அமைப்பு,இடையே இசை,உணர்ச்சிமிக்க,கருத்து நிறைந்த பாடல்கள்,நடிப்புத் திறமை எல்லாம் இணைந்த இந்நாடகம் ஜனநாயகம் என்ற சொல்லிற்கு அர்த்தமே இழந்து தினம் தினம் மனிதர்கள் கொன்று வீசப்படும் இன்றைய இலங்கையின் உண்மை நிலையை நினைவிற்கு கொண்டு வந்தது.இந்நாடகத்தில் பேய்களும் பையித்தியக்காரர்களும் ஒரு குறியீடாகவே பாவிக்கப் பட்டிருக்கிறன. சாதாரண மக்களுக்கு நம் நாட்டு அரசுகள் என்றும் பேயாகவும்; நம் நாட்டு அரசுகளுக்கு மக்கள் பைத்தியக்காரர்களுமாகவே காட்சி தருகிறார்கள் என்ற உண்மையை இந்நாடகம் குறிப்பதாக எண்ண இடமுண்டு.

காலம் –நேற்றும் இன்றும்

இடம்– அரண்மனை,முற்றம்;பட்டி,தொட்டி எல்லா இடங்களிலும்

பங்கு பெறுபவர்கள்:

பேயரசன்

பிரதமமந்திரி

பைத்தியக்காரன்

உழவர்கள்

பேயரசி

பேயரசனின் ஏவலாளர்கள்

தாய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்சி ஒன்று

பேயரசன் அரண்மனையில் இருக்கிறான்.அவன் தான் எவ்வளவு திறமாகவும்,ஜனநாயக ரீதியிலும் நாட்டை ஆளுகிறேன் என்று பிரலாபித்துக்கொண்டிருக்கிறான்.அப்போது பிரதம மந்திரி சடுதியாக உள்ளே வருவதைக்கண்டு அதிர்ச்சி அடைகிறான்.ஆனால் அதை அவன் காட்டிக் கொள்ளவில்லை.இருவரும் நாட்டு மக்களின் அபிப்பிராயம் பற்றி கலந்துரையாடுகிறார்கள்.

காட்சி இரண்டு:

கமக்காரர்கள் வயல்களில் வேலை செய்கிறார்கள்.பேயரசனினதும் பிரதம மந்திரியினதும் ஏவலாளர்கள் தாங்கள் பைத்தியக்காரர்கள் என்று கருதும் அனைவரையும் சித்திரவதை செய்கிறார்கள்,கொலை செய்கிறார்கள்.எங்கு பார்த்தாலும் கொலைகாரர்கள்.மக்கள் பீதி அடைந்திருக்கிறார்கள்.இதுதான் "ஜனநாயகரீதியில்" ஆழப்படும் ஒருநாட்டின் படம்.

காட்சி மூன்று:

தாய் (சமாதானப்பிரியை)நாட்டு மக்களிடம் வருகிறாள்.பைத்தியக்காரன் பேயரசனுக்கும் பிரதம மந்திரிக்கும் எதிராகப்போராடத் தயாராகிறான்.

காட்சி நான்கு:

பைத்தியக்காரன் மூலை முடுக்குகள்;பட்டி தொட்டி எல்லா இடங்களுக்கும் சென்று மக்களுக்கு விழிப்பூட்டுகிறான்.

காட்சி ஐந்து:

பிரதம மந்திரி அந்தப்பைத்தியக் காரன் பற்றி பேயரசனுக்கு எடுத்துரைக்கிறான். மேலும் மேலும் பலர் பைத்தியக்காரர்களாக மாறுகிறார்கள் அவர்கள் சொல்கிறார்கள்: இங்கு சுதந்திரமில்லை.இருக்க வீடில்லை.உடுக்க உடையில்லை.எங்களுக்குப் பசிக்கிறது!

இதற்கு பேயரசன் ஒருயோசனை கூறுகிறான்.யார் தமக்குப் பசிக்கிறது,சுதந்திரமில்லை என்று கூறுகிறார்களோ அவர்களை நரகத்துக்கு அனுப்பி விடுவது.அங்கு அவர்கள் பசியால் வாடவே மாட்டார்கள்.

அதிகார வர்க்கம் இந்த அருமையான யோசனையை எண்ணி ஆனந்தமாகக்

www.tamilarangam.net

கொண்டாடுகிறது.

காட்சி ஆறு:

பிரதம மந்திரி அந்தப் பைத்தியக் காரனைக் கைது செய்து பேயரசன் முன் கொண்டு வந்து நிறுத்துகிறான்.

பைத்தியக்காரன் பேயரசனைப் பாரமுகமாக ஏளனம் செய்கிறான்.

சிறைச்சாலைகள் நிரம்பி வழிகின்றன. எங்கு பார்த்தாலும் சுடுகாடுகள்,பிணவாடைகள்.

இறுதியில் செல்வம் பெருகிறது.பேயரசனுக்குப் பயம் பிடித்து விட்டது.பிரதம மந்திரி பைத்தியக்காரனைக் கொலை செய்கிறான்.

காட்சி ஏழு:

இறந்து விட்ட மகனின் சடலத்தின்மீது வீழ்ந்து தாய் கதறி அழுகிறாள்.பைத்தியக்காரனின் மறைவால் நாட்டு மக்கள் அனைவரும் துக்கம் கொண்டாடுகிறார்கள்.

பேயரசனுக்கும் பிரதம மந்திரிக்கும் எதிராகப் பெரும் போராட்டம் எழுந்து வருவதை வீசிவரும் காற்று அறிவிக்கிறது.

புதிய நூல் அறிமுகம்

மறையாத மறுபாதி

ஐரோப்பா வாழ் 18 புகலிடப் பெண்கள் எழுதிய கவிதைகளின் தொகுப்பு

கிடைக்குமிடம்:

EXIL
27,Rue Jean Moulin
92400 Courbevoie
France



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அன்புடன் கவிதாவிற்கு,

உன்னுடைய கடிதம் கிடைத்து ஒரு மாதமாகியும் தவிர்க்க முடியாத சில வேலைகளினால் பதில் போடத் தாமதமாகிவிட்டது. இம்முறை நீ எழுதிய கடிதம் எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தினாலும், நீ வளர்ந்த சூழல், இப்போது வாழும் சூழல் போன்றவையைக் கருத்தில் எடுத்தபோது உன்னுடைய வாதங்களிற்கான காரணங்களை அறிந்து கொள்ளமுடிகிறது. இதுவரைகாலமும், எமது சமூகத்தின் குணாம்சங்களை அப்படியே ஏற்றுக்கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்தும் சில ஆண்களினால் முன்வைக்கப்படும் கருத்துக்களை முதன்முறையாக ஒரு பெண்ணிடமிருந்து கேட்டமையே எனது அதிர்ச்சிக்கு காரணமாக இருக்கலாம். உன்னைப்போல் இன்னும் பல பெண்கள் இக்கருத்துக்களையே தலைமேற்கொண்டு தமது நிலையை புரிந்து கொள்ளாது வாழ்கிறார்கள் என்பதை நான் அறிவேன். ஒரு சமூகத்தில் பெரும்பான்மையானவர்களுக்கு எக்கருத்து உள்ளதோ, அதை பொறுத்தே அந்தச் சமூகத்தின் ஒட்டுமொத்தமான குணாம்சம் அமைந்திருக்கும். எமது சமூகத்தில் ஆழப் பதிந்திருக்கும் ஆணாதிக்க வேர்கள் அதில் வாழும் பெரும்பான்மையினரில் பாதிப்புக்களை உருவாக்கியிருக்கின்றது. நீ எழுப்பியுள்ள சில கேள்விகளுக்கு நான் பதில் எழுதலாமென நினைக்கிறேன்.

உனது கடிதத்தை வாசித்தபோது, அதன் சாராம்சமாக அமைந்திருந்ததானது

பெண்கள் ஏற்கனவே சுதந்திரமாகத்தான் வாழ்கிறார்கள் என்பதுவும், அவர்கள் எந்தவிதமான ஒடுக்குமுறைக்கும் ஆளாக்கபடவில்லையென்றதுவுமேயாகும். உனது கடுமையான விமர்சனம் ஐரோப்பாவில் பெண்விடுதலை பற்றி எழுதுபவர்கள், கதைப்பவர்கள்மேலேயே இருந்தது. இல்லாத ஒரு விடயத்தை இவர்கள் இருக்கின்றது என எழுதியிருந்தாய். "ஐரோப்பிய நாடுகளில் நாங்கள் எல்லோரும் சுதந்திரமாகத்தான் இருக்கிறோம்". எனக்குத் தேவையானவை எல்லாம் அவர்வேண்டித் தருகிறார். தேவையான இடங்களிற்கு அழைத்துச் செல்கிறார். இதைவிடவேறு என்ன சுதந்திரம் தேவை"என கேள்வி கேட்டிருந்தாய். பெண்கள் என்றும் பெண்களேயென்றும், ஆண்கள் என்றும் ஆண்களே என்றும் எழுதியதோடு, பெண்களென்றும் ஆண்களுக்கு அடங்கி வாழ்வதே முறையென்றும் எழுதியிருந்தாய். ஒரு கணவன் தனது மனைவியை அடிப்பதற்கு தகுந்த காரணமிருக்குமெனவும், அதிகமான பெண்கள் ஆண்களை ஆத்திரமூட்டுகிறார்கள். அதன் விளைவே அடியாக விழுகிறது என்றும், எத்தனையோ பெண்கள் ஆணகளுக்கு அடிக்கிறார்களே என எழுதியிருந்தாய். ஐரோப்பாவில் வாழும் தமிழ்ப்பெண்கள் சுதந்திரம் வேண்டுமெனக் கேட்கிறார்கள். இவர்கள் கேட்கும் சுதந்திரம் இவர்களுக்கே தலையிடியாக அமையப் போகுதென்றிருந்தாய். இவர்கள், ஐரோப்பிய சூழலில் வாழும் தமது பெண்குழந்தைகளுக்கு சுதந்திரம் கொடுத்து வளர்த்து விபரீதமான முடிவுகளை எதிர்நோக்கப் போகிறார்கள் என்றாய். ஐரோப்பிய பெண்களின் சுதந்திரம், ஒரு சீரழிந்த கலாசாரத்தை உருவாக்கியிருப்பதுடன், அவர்களது சுதந்திரந்தான் வீதியெங்கும் விபச்சார விடுதிகளை உருவாக்கியிருக்கின்றதென்றும் எழுதியிருந்தாய்.

நீ எழுதியவைகளுக்கு மட்டும் நேரடியாகப் பதில் எழுதாமல் இச்சமூகத்தில் நாங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் எப்படியெல்லாம் ஒடுக்கப்படுகிறோம் என்பதை உனக்குச் சுருக்கமாக எழுதுகின்றேன். நீ இவற்றையெல்லாம் நேரடியாக அனுபவித்தும் இவை சாதாரண வாழ்வின் அம்சங்களென எண்ணிக் கொண்டிருக்கிறாய். உன்னைப் போல் தான் இன்னும் பலர். ஒரு பெண் பிறந்தநாளிலிருந்து அவள் குடும்பத்தினராலும்,

www.tamilarangam.net

சமூகத்தினராலும் ஒரு சுமையாகவே கருதப்பட்டு வருகிறாள். ஒரு ஆண் பிறந்தால் சந்தோஷிக்கும் பெற்றோர்கள் ஒரு பெண் பிறந்தால் அவளை சந்தோஷத்துடன் வரவேற்பது மிகக்குறைவு. அப்படி அவர்கள் சந்தோஷப்பட்டாலும், பிற்காலத்தில் பெற்றோர்கள் நோய்வாய்ப்பட்டால் அவர்கள் இறுதிவரைக்கும் கவனிப்பார்கள் என்ற நோக்கிற்காகவே.

நீயே கவனித்திருப்பாய், உனது குடும்பத்திலேயும் சரி ஏனைய குடும்பங்களிலும் சரி ஒரு ஆண்பிள்ளையின் கல்வியை முதன்மைப்படுத்தும் பெற்றோர்கள் பெண்களின் கல்வியைப் பற்றி அக்கறைப்படுவதில்லை. ஏன் உனக்கே தெரியும் தானே, உனது அக்காவிற்கு பல்கலைக்கழகத்தில் படிக்க வாய்ப்பு கிடைத்தும், கல்யாண சம்பந்தம் ஒன்று கிடைத்தவுடன்,கல்யாணம் தான் பெண்ணாகப் பிறந்தவர்களுக்குக் கிடைக்கும் மாபெரும் அதிஷ்டம் எனக்கூறி, உனது அக்காவின் விருப்பத்திற்கு மாறாக கல்யாணம் செய்து வைத்தார்கள். இதுபோல் தான் அதிகமான வீடுகளில் நடக்கின்றன. ஆனால் இது ஒரு ஆணிற்கு நடக்குமா? நீயே கவனித்திருப்பாய், ஆம்பிளைப்பிள்ளைகளை வெளிவேலைகளிலும், பொம்பிளைப்பிள்ளைகளை சமையல், தையல் போன்ற வேலைகளிலும் தான் ஈடுபடச் செய்வார்கள். வீட்டிற்கு விருந்தாளிகள் வந்தால் சமையலறையில் வேலைக்காக அழைப்பது பொம்பிளைப் பிள்ளைகளையே. நீ எப்போதும் சொல்வாயே உனது கணவன் யார் வீட்டிற்கு வந்தாலும் ஹோட்டல் மாதிரி உன்னைத் தான் தேனீர் அல்லது சாப்பாடு தயார் செய்யச் சொல்லி ஓடர் பண்ணுவார் என்று. இதுவெல்லாம் சிறுவயதிலேயே போடப்பட்ட அத்திவாரங்கள். அப்பாமாரினதும், அண்ணாமாரினதும் உடுப்புகள் கிழிந்தால் அம்மாமாருக்கு நேரம் இல்லாவிட்டால் மகள்மாரே செய்யவேண்டியுள்ளது. தையலில் அல்லது சமையலில் நீ திறமையாகச் செய்தால் தான் உனக்கு பாராட்டு கிடைக்கும். ஏன் விளையாட்டுச் சாமான்கள் வேண்டும்போதும் கூட ஆம்பிளைப்பிள்ளைகளுக்கு கார், டிரேயின், பந்து போன்றவற்றையும் பொம்பிளைப்பிள்ளைகளுக்கு பொம்மை, சட்டிபானைகள் போன்றவற்றையே தெரிவு செய்வார்கள்.

www.tamilarangam.net

உனக்கு ஞாபகமிருக்கிறதா உனது அண்ணணின் மகள் மரத்திலேறி விளையாடியதிற்கு உனது அம்மா, அப்பா, "என்ன நீ ஆம்பிளைப்பிள்ளையே இப்படி விளையாடுறதுக்கு" எனக் கேட்டது. இதிலிருந்து தெரிவது பெண்கள் அடக்கமாக எல்லோருக்கும் பணிந்து வாழவேண்டுமென்பதே.

வடிவாக யோசித்துப் பார்த்தால் உனக்கே புரியும். எல்லாவற்றிலுமே பெண்களைவிட ஆண்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுவதை.. நீயே என்னிடம் எத்தனை தரம் சொல்லியருப்பாய், உனது அம்மா எல்லோரும் சாப்பிட்டு முடிந்தபின் தான் சாப்பிடுவதென்றும், பழைய உணவுகளை மற்றவர்களுக்குக் கொடுக்காது தானே உண்ணுவது என்றும். இவையெல்லாம் பெண் எப்படியிருக்கவேண்டுமெனக் கூறப்பட்ட போதனைகளின் விளைவுகளே.

ஒரு குறிப்பிட்ட வயது வந்ததுமே ஒரு சுமையை எவ்வாறு நீக்குவதென உனக்கு மாப்பிளை பார்க்கும் படலத்தை அவர்களே ஆரம்பித்து விடுவார்கள். உனக்கு பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் அவர்கள் விரும்பும் நேரத்தில் கல்யாணம் செய்தேயாகவேண்டும். உனது விருப்பம் அங்கு முக்கியமானதல்ல. பெரியோர் முன்னிலையில் தாலிகட்டி ஆரம்பிக்கப்படும் தாம்பத்திய வாழ்வுதான் வாழ்க்கை. உனது புருஷன் எப்படியானவனாகவிருந்தாலும் நீ சகித்தேயாகவேண்டுமென்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்பு. நீயே சொல்லியிருக்கிறாயே கணவன் அடிப்பதன் நியாயங்கள்பற்றி. இருவராலும் சேர்ந்து ஆரம்பிக்கப்படும் ஓர் உறவில் யாரும் ஆதிக்கம் செலுத்தவேண்டியதில்லை. அடிப்பதென்பது இன்னொருவர் மீது தனது பலத்தைப் பிரயோகிப்பதே. இப்படி இம்சைப்படுத்துவது அதிகாரத்தின் ஓர் வடிவமே. இப்பிரச்சினைக்கு பெண்களும் அடிக்கின்றார்கள் என்ற வாதம் முற்றிலும் பொருத்தமற்றது. தொடர்ந்து வெறித்தனமாக ஒருவன் மனைவியைத் தாக்குவதானால் அவளும் திருப்பி அடிப்பது முற்றிலும் நியாயமானது. அத்தகைய நிலைமைகளில் அவள் மட்டும் சகித்துக் கொள்ள வேண்டிய அவசியமேயில்லை.

பெண் என்பவள் இறுதி வரைக்கும் தனக்கு இஷ்டமற்ற மணவாழ்வைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்ந்து நடாத்தவேண்டும் அவள் அந்த ஒருவரோடுதான் காலம் பூராகவும் வாழவேண்டும். அவன் இறந்தவுடன் அவளது வாழ்கையும் முடியவேண்டும். அப்போது தான் அவள் நல்ல பெண். கற்பு என்று ஒன்றைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஒரு பெண் ஒழுக்கமாக இருக்கவேண்டும் என்ற வரையறை வேறு உள்ளது.

கல்யாணமாகித் தகுந்த காலத்தில் நீ ஒரு பிள்ளையைப் பெற்றேயாகவேண்டும். அதுவரை எல்லோரது கவனமும் உன்பாலே இருக்கும்.சிலசமயத்தில் உனக்குக் குழந்தை பிறக்காவிட்டால் "மலடி" என்ற பெயரையும் உனக்கு சூட்டிவிடுவார்கள்.பிள்ளை இல்லை என்பதற்காக அடிவேண்டும் எத்தனையோ பெண்களை எனக்குத் தெரியும்.

வீட்டுவேலைப்பழு முழுவதும் பெண் மீதே சுமத்தப்படுகின்றது. இதே வெளியில் சென்று வேலை பார்க்கும் பெண்ணாகவிருந்தால் இச்சுமை இரட்டிப்பாகின்றது. சமையல், வீடு துப்பரவு செய்தல், துவைத்தல், பிள்ளைகளைக் கவனித்தல் போன்றவை அவளது நித்திய கடமைகளாகின்றன. இதை நான் ஒன்றும் புதிதாக உனக்குச் சொல்ல வேண்டியதில்லையே. சிறுவயதில் கற்பிக்கப்பட்டவை இங்கேயே அரங்கேற்றப்படுகின்றது. இட்லிக்கு மாச் சேர்த்தால் நல்லதா அல்லது றவை சேர்த்தால் நல்லதா என்பதே அவளது தலைவெடிக்கும் பிரச்சினை. தினம் கஷ்ரப்பட்டு ஒரு பெண் சமைத்தாலும் அவள் சமைக்கவேண்டியவைகளைப் பொதுவாக கணவனே தீர்மானிக்கின்றான். "எனக்கு மீன்தான் பிடிக்கும். ஆனால் அவவுக்குக் கண்ணிலேயும் காட்ட ஏலாது. ஆனபடியால் வீட்டிற்குள்ளேயே எடுக்க வேண்டாமென்டிட்டார். அதனால் நான் வீட்டில் அவருக்குபபப் பிடிக்காதவைகளைச் சமைப்பதில்லை. அப்படிச் சமைத்தாலும் வேறாகக் கறிகள் சமைக்கவேண்டும். எனக்குத்தான் வேலை. எங்கையாவது போனால்த்தான் எனக்கு விருப்பமானவைகளைச் சாப்பிடலாம். அதுவும் அதிகமாக அவருக்குப் பிடித்தவைகளையே அவர்கள் சமைத்து வைப்பார்கள்." இவ்வாறு அன்மையில் ஒரு பெண் சொல்லக் கேட்டேன். கணவனின் விருப்பங்களே திருமணத்திற்குப் பின் ஒரு பெண்ணின் விருப்பமாக இருக்கவேண்டுமென்பதே பொதுவான கணிப்பீடு.

www.tamilarangam.net

பொதுவாக ஆண்களின் பார்வையில், ஒரு பெண் தனது வேலைகளை நேரத்திற் செய்து முடிக்கும் இயந்திரமும், கட்டிலில் சுகம் தருபவளும் மாத்திரமே. இதைத்தவிர அவளுக்கு உணர்ச்சிகளோ, ஆசைகளோ இருக்கின்றதென உணரும் ஆண்களைக் காண்பது அரிதிலும் அரிது.

இருவர் சேர்ந்து வாழும்போது பிள்ளைகள் வேண்டுமா இல்லையா என்பதை முடிவு செய்யும் உரிமை ஒரு பெண்ணிற்கு இல்லை. அக்கருவை தாங்குவதா அல்லது கருக்கலைப்புச் செய்து கொள்வதா என்பதை ஆணே முடிவு செய்கின்றான். இது உனக்கு அநியாயமாகத் தெரியவில்லையா?

குழந்தையைப் பெறுவதற்கு முன்பும் அதன் பின்பும் ஒரு பெண்ணின் வாழ்க்கையிலேயே பாரிய மாற்றங்கள் ஏற்படுகின்றன. குழந்தை ஓரளவு வளர மட்டும் அவள் வேலைக்குச் செல்லவோ அல்லது தனது படிப்பைத் தொடரவோ முடியாது. இவை ஒரு ஆணைப் பாதிப்பதில்லை.

இரண்டு பிள்ளைகளையும் சத்திரச்சிகிச்சை மூலம் பல வேதனைகளுக்கு மத்தியில் பெற்றபின்பும், மூன்றாவது பிள்ளையையும் கட்டாயமாக பெறவேண்டுமெனக் கட்டாயப்படுத்திய கணவன்மாரையும், "இந்தப் பிள்ளையை நீ அழிக்காவிட்டால் நானே வயிற்றில் உதைச்சுக் கொல்லுவேன்" என்ற கணவனையும் எனக்குத் தெரியும்.

இத்துனைத் துன்பங்களுக்கு மத்தியில் நாம் பிள்ளைகளைப் பெற்றாலும், வம்சத்தைப் பாதுகாப்பதற்காக தந்தையின் பெயரைத்தானே பிள்ளைகள் எடுக்கவேண்டும். நாமும் கல்யாணம் செய்யும்வரை தந்தையின் பெயரையும், பின்பு கணவனது பெயரையும் தானே எடுக்க நேரிடுகிறது. அதிலிருந்து எமது வாழ்நாள் பூராகவும் ஒரு ஆணில் தங்கியிருக்கவேண்டுமென்பது புலப்படுகின்றதல்லவா? பெண்களாகிய நாங்கள் தனித்துவமான பிரஜைகளாக அங்கீகரிக்கப்படுகின்றோமா? இதை நீ ஒரு ஒடுக்குமுறையாகக் கருதவில்லையா?

இவைமட்டுமா? ஒரு வேலைக்குப் போகும் ஒரு பெண்ணை எடுத்துக் கொண்டால் , அவள் ஆணிற்கு சமனாக வேலை செய்தாலும் குறைந்த கூலியே கிடைக்கின்றது. இவைதவிர அவள் எதிர்கொள்ளும் பாலியல்வன்முறைகள் தான் எத்தனை? பதவியுயர்வு என்று வரும்போது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆணிற்கே அவ்வாய்ப்புக் கிடைக்கின்றது. இவை யாவும் பெண் என்பதால் திட்டமிட்டு செய்யப்படுபவை.


இனி உனது விமர்சனமான ஐரோப்பாவில் பெண்விடுதலையைப் பற்றி பேசுபவர்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்கிறேன். வறட்டு கலாசாரங்களைப் பேணிக் கொண்டு வாழும் எமது சமூக அச்சினால் வடிக்கப்பட்டவர்கள்தான் இங்கு வாழ்பவர்கள். ஆகையால் எல்லாவிதமான பழக்கவழக்கங்களும் இங்கேயும் தொடர்கின்றன. பெண்கள் பொட்டு வைக்கவேண்டும், சேலை கட்டவேண்டும் என்ற கட்டுப்பாடுகளும் இன்னும் நம் மத்தியில் இருக்கின்றன என்பது உனக்குத் தெரியுந்தானே. தனியக் கலாசாரத்தினால் மட்டுமல்ல, நாங்கள் முழு உலகத்திலுமே இரண்டாந்தரப் பிரஜையாகத் தானே நடாத்தப்படுகின்றோம். உனக்கு உன்னுடைய கணவர் எல்லாம் வேண்டித்தருவதும், அவரே உன்னைக் கூட்டிச் செல்வதும் கூட ஒரு ஒடுக்குமுறை தானே. நீயே சுயமாக எங்கும் செல்லவோ அல்லது உனக்குப் பிடித்தவற்றை நீயே வேண்டவோ உனக்கு அனுமதியில்லை அல்லது நீ அப்படிப் பழகவில்லை. ஐரோப்பியப் பெண்களின் சுதந்திரம் விபச்சார விடுதிகளைக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளது என்று சொல்லியிருந்தாய். இவ் விபச்சார விடுதிகள் ஆண்களைத் திருப்திப்படுத்தும் நோக்கிற்காக அரசுகளினால் அமைக்கப்படுபவையே. பெண்விடுதலைக்காகக் குரல் கொடுக்கின்ற குழுக்களினால் இவ்விடுதிகளை அகற்றுமாறு கோரிக்கைகள் விடப்படுகின்றன. ஐரோப்பியப் பெண்களும் முழுமையான சுதந்திரத்தை அனுபவிக்கின்றார்கள் என்றால் அது பிழையானதே.

நாங்கள் அனுபவிக்கும் ஒடுக்குமுறைகள் பற்றி இன்னும் எழுதிக் கொண்டே போகலாம். நான் எழுதியவற்றை நீ யோசித்துப் பார்த்து உனது கருத்தை எழுது. உன் பதில்கண்டு நான் மேலும் எழுதுகிறேன். எல்லோரையும் சுகம் விசாரித்ததாகச் சொல்லு.

இப்படிக்கு,

அன்புடன் உமா.

www.tamilarangam.net



நம்பிக்கைகளுடன்
ஜனனிக்கும் விருப்பில்
ஜனநாயகம்
மீண்டும்.....மீண்டும்
கருவிலேயே சிதைவுற்றது

நண்பனே..
நீயும் துப்பாக்கியால்
மட்டுமே
நண்பனைப் பார்க்க
பழகிக்கொண்டாய்

கனமான ஆயுதங்களை
கட்டாயமாய்
உன் மேல் சுமத்தி
உன்னைத் தேசிய வீரனாக்கும்
முயற்சியிலோ பலர்

வானைப்பிளக்கும் ஓலங்களும்
அ[illegible]ழந்த நம்பிக்கைகளும்
வாழ்க்கையாகிவிட
மழைகாலத்தில் நாய்களைப்போல
நடுங்கி....சுருங்கி
வாய்மூடிய மக்கள்....

கட்டளையிட்டதும்
கொல்லுதல்
பயமுறுத்தல்
உந்தன் சகோதரர்களை
இரக்கமற்று வெளியேற்றுதல்
உன்னைச் சேர்ந்த
கடமைகளாகின.

நாளைய பொழுதில்
விடியலின்றியே
நீயும் மரணிக்கலாம்
ஆனால்....
சப்தமின்றி புதிய வரவால்
வெற்றிடம் நிரம்பும்
போராட்டம் தொடரும்....

மக்களை மௌனித்து
அவர்கள் மௌனத்தில்தான்
உந்தன் ஆயுதம்
நிலைக்குமானால்
எமது தேசத்தின்
விடியலின் கல்லறை
உனது கைகளால்
கட்டப்படட்டும்.

● பிரியதர்சினி ●